விலை சதம் 50

பக்கங்கள்—8

திருக்கோணேசுவரத்
தேவாரத் திருப்பதிகம்

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம்சோப் அல்லது 2மெடிக் கேட்டட் சோப் அல்லது 2 சவலைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி சிறந்த நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
வார மலர்
THE EELANAADU VAARAMALAR

### கொழும்பில் ஜெயசித்ரா தேங்காய்

(கொழும்பு)
தமிழ்நாடு திரும்பிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நேற்று மீண்டும் கொழும் திரும்பினர்.

அவருடன் நடிகை ஜெயசித்ரா, நகைச்சுவை நடிகர் தேங்காய் சீனிவாசனும் நேற்று கொழும்பு வந்தார். (ம-இ)

மலர் 20 மாசி 14 ரபிஉல் அவ்வல் 17 ஞாயிற்றுக்கிழமை [26—2—78] இதழ் 16

# தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பு விதிகளில் மாற்றம்

## 'இராசு'வுடன் பேச்சு நடத்த சம்பந்தர் தலைமையில் குழு

(திருமலை)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டம் திருகோணமலை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு.இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றபோது கூட்டணியின் அமைப்பு விதிகள் மாற்றியமைக்கப்பட்டன.

திரு. ரேலஸ்டிவால் தலைமையில் கூட்டம் காலை 10மணி தொடக்கம் 5மணி வரை மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு எம்.பி.திரு. சி.இராசதுரை இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

### இராசுவுடன் பேச்சு நடத்த குழு நியமனம்

மட்டக்களப்பு எம்.பி.திரு. இராசதுரையுடன் பேச்சு வார்த்தை நடத்தி கூட்டணியில் அவரது நிலைபற்றி ஆராய திருமலை எம். பி. திரு. இரா சம்பந்தன் தலைமையில் 4 பேர் கொண்ட குழு ஒன்றையும் நடவடிக்கைக் குழு நியமித்தது.

யாழ். எம். பி திரு. வெ. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு ரி. ராஜலிங்கம், மன்னார் எம். பி. திரு. எஸ். சூசைதாசன் ஆகியோர் இக் குழுவில் அங்கம்வகிக்கின்றனர்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் ஜே. வி. பி. பிரமுகர்

(பண்டத்தரிப்பு)
ஜனதா விமுக்தி பேரமுனை (மக்கள் விடுதலை முன்னணி)யின் அரசியல் குழு உறுப்பினரான திரு.லயனல் போபகே யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார்.

இவர் தமது கட்சி அமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்காக இங்கு தங்கியிருந்து மல்லாகம், அரியாலை, மற்றும் தீவுப்பகுதிகளுக்கும் சென்று ஆதரவு திரட்டி வருகின்றார்.

கடந்த வியாழக்கிழமையன்று செந்தமிழர் இயக்கத்தின் பொதுச்செயலாளர் திரு.வி.

[8-ம் பக்கம் பார்க்க]

## திங்கள்முதல் வழமைபோல் பாடசாலைகள் நடைபெறும்

நாளை திங்கட்கிழமை நாடு முழுவதிலும் உள்ள சகல பாடசாலைகளையும் வழமைபோல் திறப்பதெனஅரசு முடிவுசெய்துள்ளது.

பாடசாலை செல்லும் மாண வர்களுக்கும் ஆசிரியர்களுக் கும் போதிய பாதுகாப்பு அளிப்பதென்றும் அரசு தீர் மானித்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

### தேவை

மருத்துவமனைக்கு தாதிகள், பிரசவ தாதிகள், ஆண், பெண் தாதி உதவியாளர்கள் தேவைப் படுகிறார்கள். மாலை 4 மணிக்கும் 9 மணிக்குமிடையில் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

டாக்டர் வி. செல்வரத்தினம்,
வைத்திய நிலயம்,
574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(இலங்கை வங்கிக்கு அருகாமையில்) 8602

யாழ். லயன்ஸ் கழகத்தின்
சமூக சேவை நிதிக்காக
யாழ். மனோகராவில்
3-3-78 வெள்ளிக்கிழமை
மக்கள்திலகம் — தமிழ்நாடு முதலமைச்சர்
எம். ஜி. ஆர்.
இரு வேடங்களில் நடிக்கும்
ஊருக்கு உழைப்பவன்
(ஈஸ்ட்மன் கலர்)
டிக்கட் விபரம்: ரூ. 25-00, 20-00, 15-00, 10-00, 5-00, 3-00

கிடைக்குமிடங்கள்:

| | |
|---|---|
| கொமேஷல் ஏஜன்ஸீஸ், | 17, மின்சார நிலைய வீதி. |
| சமுத்திரா ட்ரேடர்ஸ், | 23/2, ஸ்ரான்லி வீதி. |
| மலையன் றேடியோ சேவிஸ், | 45, கஸ்தூரியார் வீதி. |
| டாக்டர் யோகுபசுபதி, | கஸ்தூரியார் வீதி. |
| ஹட்டன் நஷனல் வங்கி, | ஆஸ்பத்திரி வீதி. |
| கொமேஷல் வங்கி. | ஆஸ்பத்திரி வீதி. |

அம்புஷ் 25
வெங்காயம்-மிளகாய்
பயிர்களை தாக்கும் புளுக்களை
கட்டுப்படுத்த வல்ல
சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.
4000 கன்றுகளுக்கு போதுமான
2 அவுன்ஸ் (50ML) அம்புஷ்
கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே.
மேலதிக விபரங்கட்கு:
த ரோரு லிமிடெட்,
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7651



# கூட்டணிக்குப் பயந்தா தரப்படுத்தலை நீக்கினோம்!

## பொய்ப்பிரசாரத்துக்கு பிரதமர் சாட்டை

(கொழும்பு)

தமிழர்விடுதலைக்கூட்டணிக்குப் பயந்தே அரசு 'தரப்படுத்தல்' திட்டத்தை கைவிட்டுள்ளது என்று வதந்தி பரப்பப்பட்டுள்ளது. எவருக்கும் பயந்து அரசு இத்திட்டத்தைத் கைவிடவில்லை. இந்த நாட்டின் சகல பிரிவினருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே 'தரப்படுத்தல்' திட்டத்தை அரசு ரத்துச் செய்தது.

இவ்வாறு பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

மாவந்தகம எம். பி. யின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது தரப்படுத்தல் நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போர்வையில் அரசுக்கு எதிராக இயங்கி அரசைக்கவிழ்க்க சட்ட விரோத சக்திகள் இயங்கிவருகின்றன. இவர்கள் பற்றி சகல விபரங்களும் எமக்குத் தெரியும் இவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

சட்டபூர்வமாக மக்களின் வாக்குகளைப் பெறமுடியாதவர்கள் அவர்களின் சடலங்கள் மீது அவற்றைப்பெற முயற்சிக்கிறார்கள்.

ஐ.தே.க. அரசு எந்த ஒரு பிரிவினருக்கும் அநீதி இழைக்கப்படுவதை பார்த்திருக்க மாட்டாது. அநீதியெங்கிருந்தாலும் அதை ஒழிப்போம். (ம-இ)

## வடபகுதிக்கு 5 லட்சம் உயர்ரக தென்னங்கன்றுகள்

### பேரவையில் அமைச்சர் தகவல்

[கொழும்பு]

குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய சுமார் 5 லட்சம் தென்னங்கன்றுகள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் என தேசிய அரசுப் பேரவையில் தோட்ட கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன கூறினார்.

வடக்கில் பனம் பொருள் உற்பத்திசபை ஒன்று நிறுவப்படும் என்றும் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. ஜெயவர்த்தனஉறுதிகூறினார்.

அமைச்சர் ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:

கடந்த அரசு தெங்கு உற்பத்தியை பாழடித்துவிட்டது. இதனால் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. இந்த நிலையை திருத்த நடவடிக்கை எடுப்போம்.

குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய தென்னங்கன்றுகளை வழங்கவிருக்கிறோம்.

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு கூறியதாவது:

அடுத்த 10 வருட காலத்தில் தேங்காய் நமது உணவுக்கு மட்டுமே போதியதாக இருக்கும். ஏற்றுமதிக்கு போதிய தேங்காய் இருக்காது

வரண்டபிரதேசங்களில் தெங்கு ஆராய்ச்சி நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும்.

பனை செய்கை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். நீர்ப்பாசன பசளைவசதியின்றியே பனை வளரும்.

தமிழ்நாட்டில் 16 கோடி ரூபா தெங்கு உற்பத்திமூலம் கிடைக்கிறது. ஆனால் இங்கு 10 ரூபா கூட கிடைக்கவில்லை.

பனை உற்பத்தியினால் பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன் கள், சாராயத்திற்கு இதனைப் பயன்படுத்தலாம். (ம. இ)

## பதவி வெற்றிடம்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்கள் 13-03-1978 மு. ப. 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக 'தலைவர், பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் தவறாது குறிப்பிடப்படல்வேண்டும்.

அந்த மாவட்டத்தில் குறைந்தளவு இரண்டு வருட காலம் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

### 1. பொதுமுகாமையாளர் தரம் 3 நிரந்தரமானது

வயது:- 23—50 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம் 340—590 / 15x10—20x5

கல்வித்தகைமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி.
2. 3 வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரம்.
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர்.
4. ரூபா 2000000/-இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத்தாபனம் ஒன்றின் மேல்முகாமைப் பதவியில் 3 வருடகால அனுபவம் உடைய ஒருவர்.

பிணைப்பணம்

மாதாந்த வேதனத்தின் 5 மடங்கு. உரொக்கம். ஆதனம்:- 5000/-

### 2. கணக்காளர் தரம் 3 நிரந்தரமானது

வயது:- 23—40 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்: 300—500 / 12-50x10—15x5

கல்வித் தகைமைகள்

1. கொழும்பு சிரேட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் பெற்றுள்ள டிப்ளோமா, அல்லது
2. கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரத்துடன் அத்தகைய ஒரு நிறுவகத்தில் பெற்றுள்ள ஒரு வருட கால அனுபவம், அல்லது
3. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூட்டுறவு வேலையாளர் [சாதாரண தர தராதரப்பத்திரமும், அத்தகைய ஒரு நிறுவனத்தில் பெற்றுள்ள 3 வருட கால அனுபவம், அல்லது
4. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர்.

தலைவர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி. 8614

## அமெரிக்க 'ஜாஸ்' இசை மேதை விஜயம்

(கொழும்பு)

உலகப்புகழ்பெற்ற 'ஜாஸ்' இசை நிபுணரும். அமெரிக்க ஒலிபரப்புமூலம் பிரபல்யமான வருமான வில்லிஸ் கோனோவர் இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகைதருகின்றார். இந்த விஜயத்தின்போது அவர் ஜாஸ்' வாத்திய இசை பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். பெப்ரவரி 27 ம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி இரவு 7 மணிக்கு இடம்பெறும்.

'ஜாஸ்' இசைத்துறையில் நிபுணரான இவர் அமெரிக்க ராஜாங்க அமைச்சில் ஜாஸ் இசைக்கான கலாசார நிகழ்ச்சி அளிப்பு உப குழுவில் பணியாற்றுகின்றார். பேர்லி இசைக் கல்லூரியின் நம்பிக்கைப் பொறுப்பாளர் குழுவில் உறுப்பினராய் இருக்கிறார்.


### விற்பனைக்கு

க. பொ. தரா. (உயர்தர) பரீட்சைக்கு உகந்த இந்து நாகரீக வினாவிடை விற்பனையாகின்றது. ரூ 2-50 அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். அறிவுப் பொழில், நெடுந்தீவு., 8622

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடு கட்டுவதற்குத் தகுந்த 4 1/2 பரப்புக்காணி நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு மிக அண்மையில் நல்லூர் குறுக்குத் தெரு - செட்டித்தெரு மத்தியில் 2 பரப்பு, 2 1/2 பரப்புக்களாகவும் விற்கப்படும். விபரங்களுக்கு கா. தர்மலிங்கம், 16. இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8605

அச்சுவேலி சந்தைக்கு அண்மையில் சந்நிதி வீதியில் 3 பரப்பு வீடு கட்டக்கூடிய காணியும், வல்லைவீதியில் ஊரியான் என்னும் வயல்: $12\frac{1}{2}$ பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. மகேஸ்வரன், அயோத்தியா, சரசாலை. 8573

கந்தையா சாமியாரின் (குடைச்சாமி) புகைப்படம் ஊர்வல நிகழ்ச்சி பிரதிகள் தேவையானோர் நேரில் பெற்றுக் கொள்ளவும். Guna Foto (குண போட்டோ), குமர கோட்டம், கோண்டாவில் 8603

உரும்பிராய் V.T. செல்லத்துரை வீதியில் 7 பரப்புக்காணி (கூருவன்காணி) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. குணசிங்கம், யாழ்ரோட், உரும்பிராய். 8607

சாவகச்சேரி இந்துக்கல்லூரி புகையிரதநிலையம், கண்டி வீதி அண்மையில் நாகரீக சூழலில் கிணற்றுடன் குடியிருக்க 4 பரப்புக்காணியும், சங்கத்தானை கந்தசுவாமி கோவிலுக்கருகாமையில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகன் அரிசி ஆலை, சாவகச்சேரி, எஸ். கே. முருகையா, கொக்குவில் கிழக்கு, எஸ். யோகேஸ்வரன், மணியம் வளவு, தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. 8618

### தேவை

மின்சார வயறிங் வேலைகளில் குறைந்தது 10 வருட அனுபவமும், ஆங்கிலம். தமிழ் வாசிக்க எழுத ஓரளவு தெரிந்திருப்பதுடன், 20 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்ட எலெக்ரிசியன் தேவை. சகல விதமான கட்டிட வயறிங், சகல மோட்டார் வயறிங் வேலைகள் செய்த அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். நாட் சம்பளமாகவோ மாதச் சம்பளமாகவோ வேலை தரப்படும். சம்பளத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடவும். நியூ எலெக்ரோனிக்ஸ். 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8516

சிற்றுண்டிச்சாலைக்கு சமையல்காரர், டீ மேக்கர், காசாளர் தேவை. நேரில் வரவும். சிற்றுண்டிச் சாலை, தபால் கந்தோர், யாழ்ப்பாணம். 8619

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் (றெமிங்ரன் புதிய மொடல்) விரும்பத்தக்கது முகவரி: க. பாலசுப்பிரமணியம், நுணுவில் கல்வயல் வீதி, கல்வயல், சாவகச்சேரி. 8574

சிறு அச்சகம் தேவை. விலை தெரிவிக்கவும். விளம்பர இல. 8613, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 8613

யாழ் நகரின் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சமையல்பகுதியில் வேலை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. விரும்புவோர் விளம்பர இல 8588, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் 8588

### தேவை

காரைநகர் இந்துக் கல்லூரியில் மனையியல் போதிப்பதற்கு ஆசிரியர் தேவை. விண்ணப்பதாரிகள் 10-ம் வகுப்புவரை கற்பிக்கும்தகைமை பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் 1-3-78 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் சமூகமளிக்கவும். அதிபர், காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர், 8609

"எங்களில் ஒருவன்" திரைப் படத்துக்கு நடிப்பதற்கு நடிகர். நடிகையர்கள் தேவை. நடிக்க விரும்புபவர்கள் தமது புகைப்படத்துடன் விபரங்களை சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இல: 8611 மே/பா "ஈழநாடு". யாழ்ப்பாணம். 8611

சகலவிதமான பைப் பிற்றிங் (Pipe fitting)வேலையில் குறைந்தது 10 வருட அனுபவமுள்ள பைப் பிற்றர்கள் உடனடியாகத் தேவை. (வயது 20-40 உட்பட்டவர்கள்) சகல கட்டிடங்களிலும் பைப்புகள் அமைப்பதற்கும், மின்சார பம்புகளுக்கு பைப்வேலைகள் செய்வதற்கு அனுபவச் சான்றிதழ்களுடன் விரும்பும் சம்பளத்தையும், நாட் சம்பளமாகவோ, மாதச் சம்பளமாகவோ தேவை என்பதையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவும். நியூ எலெக்ரோனிக்ஸ், 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8615

### கல்வி

எலக்ரோ ரெக்னிகியின் டிப்புளோமா (மின்சாரம்) மூன்றுமாதங்களில் வியாழன், வெள்ளி, சனி இரவு 8 மணிக்கு, தொழில்நுட்பப் பாடசாலை, யாழ்ப்பாணவீதி, காங்கேசன்துறை. 8617

### சேவை

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம், இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) ஆங்கிலப் பேச்சு (Spoken English) பொது அறிவு கற்றுக் கொடுப்பார்கள். கத்திய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258

### WANTED

"Wanted immediately smart young girl for an establishment in Jaffna dealing in cycles, water pumps etc. Should possess knowledge of english typing, experience in sales and accounts. Also be able to maintain stock cards. Apply before 4-3-78 with copies of testimonials and state salary expected. Advt. No. 8597, C/o Eelanadu Ltd, P. Box No 49, Jaffna."
8597


## திருமலைவெற்றி

[திருமலை]

திருகோணமலைக் கோஷ்டிக்கும் பிரான்ஸ் அச்மெகுர் சமூகத்துக்குமிடையில் திருகோணமலை மைகேசர் விளையாட்டரங்கில் நடந்த சிநேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் திருகோணமலைக் கோஷ்டி ஒரு கோல் அடித்து வெற்றியீட்டியது. இந்தப்போட்டிக்கு பி[illegible] மத்தியஸ்தம் வகித்தார்



# வயது வித்தியாசம்

க. தர்மலிங்கம்

சுகுமார் தனக்கு வந்து இருந்த அந்தக் கடிதத்தை வாசித்தான்: 'தம்பி, அறிவது. உன்னுடைய அக்காவுக்கு ஒரு சம்பந்தம் வந்திருக்கு. மாப்பிள்ளை உங்கேதான் வேலை செய்கிறாராம். அவருடைய பெயர், வேலைசெய்கிற இடமெல்லாம் எழுதியிருக்கு. ஒருக்கால் ஆளை நேரில்பார்த்து கடுதாசி போடு. ஆவணி முடிவதற்கு இன்னும் பத்துநாள் தான் கிடக்குது. உனக்குத் தெரியுந்தானே, அவளைப் பார்த்துக்கொண்டு எத்தனை பின்னால் இருக்குது என்று. கூடிய சிக்கிரம் பதில் போடவும்.'

இது அவனுடைய தாய் எழுதிய கடிதம்.

மாப்பிள்ளையைப் பற்றி விசாரிப்பதற்குச் சுகுமாருக்கு அதிக கஷ்டம் ஏற்படவில்லை. அவனுடைய நண்பன் ரவி அங்கேதான் வேலை செய்கிறான். ரவியிடம் அவன் விஷயத்தைக் கூறியதும் அவன் மாப்பிள்ளையின் குண,நடைக்கு ஒரு சபாஷ் போட்டான்.

'இப்படிப்பட்ட ஒருவர் கிடைப்பதற்காகத்தானோ உன் அக்காவின் திருமணம் இவ்வளவு காலமும் தள்ளிப் போனது?' என்று கேட்டும் வைத்தான்.

சங்கர் அவனின் பெயர். தேயிலை ஏற்றுமதி செய்யும் கம்பனி ஒன்றில் மேற்பார்வையாளராக இருந்தான் அவன். சுகுமாரையும் சங்கரையும் நேரடியாகச் சந்திக்கவைத்தான் ரவி. அவனோடு பேசிப் பார்த்ததில் எல்லா விதத்திலும் தன்னுடைய அக்காவுக்கு ஏற்றவன் நான் என்று சந்தோஷப்பட்டான் சுகுமார். சீதனம் போன்ற விடயங்களை நேரடியாகப் பேசினான் சுகுமார். 'சீதன விஷயங்களை அப்பாவுடன் பேசுங்கள்' என்றான் சங்கர். சம்பந்த விடயமாக மூவரும் கதைத்துமுடித்த பின், அடுத்துவரும் வெள்ளிக்கிழமை பெண்ணைப் பார்த்து முடிவுசெய்யலாம் என்ற முடிவுடன் பிரிந்தார்கள்.

சுகுமார் வீடு சென்றபோது, அவனது தங்கைகள் முதற்கொண்டு, பெண்ணைப் பார்க்க மூவரும் ஊருக்குத் திரும்பியது வரை எல்லாவற்றையும் கூறினான். இவர்கள் பேசிக்கொண்டிருப்பதை கவிதா தன்னுடைய அறைக்குள்ளே இருந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

கவிதாவுக்கு வயது முப்பத்திரண்டிருக்கும். எட்டாம் வகுப்புவரை படித்தவள், இடையில் படிப்பை நிறுத்திவிட்டு, தையல் வகுப்புக்குச் சென்றுவந்தாள். அழகுள்ளவளாக இருந்தும், இத்தனை வயது வரை பேசி வந்த சம்பந்தங்கள் ஒவ்வொரு காரணங்களுக்காக குழம்பின. இதுவரை மூன்று, நான்கு இடங்களிலிருந்து பெண் பார்க்க வந்துவிட்டார்கள். அவர்கள் அனைவரும் சீதனத்தைச்சாட்டியும், நாகரீகம் போதாது என்றும் காரணம் காட்டி மறுத்துவிட்டார்கள். இதுவும் அப்படிப்பட்டதொன்றாக அமைந்துவிட்டால்? கவிதா நினைத்துப் பார்த்து வேதனைப்பட்டாள். தனக்குப் பின்னால் வயதுவந்த மூன்று தங்கைகள் தனக்காக காத்திருப்பதை அவள் அறிவாள். குடும்பத்தைக் கொண்டு நடாத்தக்கூடிய ஒருவனுக்கு அவள் வாழ்க்கைப்பட ஆயத்தமாக இருந்தாள்.

சுகுமார் தாயுடன் பேசிக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்போது அவள் அந்த உண்மையைக் கூறினாள். கவிதா மாப்பிள்ளையிலும் பார்க்க மூன்று வயது கூட இருந்தாள். இதை புரோக்கருடன் சேர்ந்து மறைத்துவிட்டார்கள் சுகுமாரின் வீட்டார். இதைக் கேள்விப்பட்ட சுகுமார் துள்ளி விழுந்தான். அம்மா திருமணமென்றால் சந்தையில் சாமான் விற்கிறமாதிரியென்று நினைத்துக்கொண்டாய்? உனக்கும் புரோக்கருக்குமிடையேயுள்ள இரகசியம் வெளியே வரமாட்டாது என்று நினைத்துக்கொண்டாயா? புரோக்கருக்குத் தேவை பணம். அவனுக்குக் குடும்பத்தைப் பற்றி அக்கறையில்லை. அவன் தன்னைப் பற்றி புழுகுவதற்காக இரண்டு, மூன்று இடங்களில் இதைப் பற்றிக் கதைத்துவிட்டால் உண்மை அவர்களுக்குத் தெரியாமலா போகும்? நீ, ஏதோ விதத்தில் குமர் கரைசேர்ந்தாக் காணும் என நினைக்கிறாய்? நானோ அவனுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறேன். இந்தக் கல்யாணம் நின்றுபோனாலும் உண்மையை மாப்பிள்ளைக்குச் சொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

சுகுமார் ரவியை சந்தித்து நடந்ததைக் கூறினான். ரவி இதைக் கேட்டு, உண்மையிலே வேதனைப்பட்டான். 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தைச் செய்து வை' என்று சொல்வார்களே, ஒரு குமர் கரையேறுவது கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்த மாதிரி என்பார்களே, அப்படியென்றால் மாப்பிள்ளை வீட்டாருக்குச் சொல்லாமல் விட்டால், என்ன என்று சுகுமாரைக் கேட்டான் அவன்.

'ரவி, நீ நினைக்கிறமாதிரி அல்ல இப்போதைய உலகம். கலியாணம் செய்து பேரப்பிள்ளைகளைக் கண்டவர்கள் கூடத் திருமணம் நடப்பதற்கு முன்னர் நடந்த விடயத்துக்காகப் பிரிந்து வாழுகிறகாலம். திருமணம் என்ற பந்தத்தில் இணைக்கும்போது வலுவுள்ள கயிற்றினால் கட்டவேண்டும் இல்லையேல் என்றோ ஒரு நாள் குலைந்துவிடும்' என்றான் சுகுமார்.

ரவி இதைப் பற்றிக் கதைப்பதற்காக மாப்பிள்ளை ஊருக்குச் சென்றான். அவன் அங்கு போன நேரம் மாப்பிள்ளையை தவிர வேறு எவரும் இருக்கவில்லை. அது ஒரு நல்ல வாய்ப்பாக அவனுக்கு இருந்தது.

'என்ன, பெண்ணைப் பார்க்கிறதுக்கு இப்பவே ஆயத்தம் போலிருக்குது' என்ற பிடிகையுடன் கதையை ஆரம்பித்தான். பேச்சினூடே அவன் தான் வந்த விடயத்தைப் பற்றிக் கதைக்காமல் விட்டால் என்ன. திருமணம் முடிந்த பின் ஒருவர் மீது ஒருவர் காட்டுகிற அன்பினால் இந்த வித்தியாசமே பெரிதாக தோன்றாமல் போகலாம் என்றெல்லாம் யோசித்தான். ஆனால், தான் இப்போது உண்மையைக் கூறுவதனால் ஏற்படும் விளைவைவிட திருமணம் முடிந்தபின் ஏற்படும் விளைவு பெரிதாக இருக்குமென அவன் நினைத்ததால் விஷயத்தை மெல்ல மெல்லக் கூறினான். அப்போது சங்கரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களையும் கவனிக்க அவன் தவறவில்லை.

சங்கர் ரவி கூறியதன் பின்னர் நிதானமாகச்சிந்தித்தான். அவன் சிந்தனையைக் குழப்பாமல் ரவியும் அமைதியாக இருந்தான். 'ரவி, இப்படி ஒரு பிரச்சனை உனக்கு எழுந்தால் நீ என்ன செய்வாய்'' என்று கேட்டான் சங்கர். தன்னுடைய வாயினாலே அவனுடைய முடிவை வெளிப்படுத்த முனைகிறான் என்பதை ரவி அறிந்து கொண்டான். இதில் என்னுடைய முடிவுக்கு என்ன இருக்கிறது. நீங்களே உங்கள் முடிவை சொன்னால் போதும் என்றான் ரவி.

'ரவி, தெரியாமலோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலையாலோ இப்படியொரு பிரச்சனை ஏற்பட்டிருந்தால் அதைஅவ்வளவு தூரம் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். ஆனால் சுகுமாரின் தமக்கையின் விடயத்தில் அவளை எனக்கு முன்னுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் அவளை ஒரு பிரச்சனையின் கண்கொண்டு பார்க்கும்போது அது பெரிதாக தோன்றுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் இணைவதினால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் என்று என்னால் சொல்ல முடியாது என்று நிறுத்தினான் சங்கர்.

'சங்கர், இந்தத் திருமணப் பேச்சு நின்றுபோவதைப்பற்றி சுகுமாரோ அல்லது நானோ வேதனைப்படவில்லை. ஆனால் உண்மையை மூடி மறைத்து இந்தத் திருமணம் நடக்கக் கூடாது என்றுதான் சுகுமார் விரும்பினான். அவனுக்கு இந்த விடயம் முன்கூட்டியே தெரிந்திருந்தால் உங்களை சந்திக்கவே அவன் வந்திருக்க மாட்டான். இந்த விடயத்தை இப்படியே விட்டுவிடும்படி கூறிவிட்டு ரவி புறப்பட்டான்.

சுகுமார் ரவியை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, வீட்டுக்கு வந்தபோது அங்கே ஒரே ஆரவாரம் நடந்தது. கவிதாவை சுற்றி பக்கத்து வீட்டுக்காரர்கள். அவனுடைய தங்கைகள் நின்றிருந்தார்கள். ஒவ்வொரு சேலையாக பொருத்தம் பார்த்துக் கொண்டார்கள்.

கவிதாவும் மகிழ்ச்சியுடன் ஒவ்வொன்றாக வாங்கி, தன்னுடைய உடம்போடு பிடித்துப் பார்த்தாள். இன்னும் சிலமணி நேரங்களில் அவள் கட்டிய மனக் கோட்டைகள் தகர்ந்து விழ இருக்கின்றன. அதற்கிடையில் இந்த ஆரவாரமா? எல்லாம் தன்னுடைய தாயினால் வந்த விளைவு என்று ஆத்திரப்பட்டான் சுகுமார்.

ரவியின் வரவுக்காக நிலைகொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தான் சுகுமார். என்ன காரணத்தைக் காட்டி, கவிதாவின் மனநிலையை மாற்றுவது என சிந்தித்தான். இந்த ஏமாற்றத்தையும் அவள் தாங்கிக்கொள்வாளா? இதனால் விரக்தி ஏற்பட்டு இனிமேல் கலியாணம் வேண்டாம் என்று அவள் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்றெல்லாம் யோசித்தான்.

ரவி சொன்னதைக் கேட்டதும் சுகுமாரின் கண்கள் பனித்தன. இந்த முடிவை அவன் எப்பவோ எதிர்பார்த்தாலும், இதுதான் முடிவு என அறிந்ததும் உள்ளம் கலங்கத்தான் செய்தது. 'ரவி வீட்டிலே எல்லோரும் இன்று பெண் பார்க்க வருகிறார்கள் என நினைத்துக்கொண்டு ஆரவாரப் படுகிறார்கள். இந்த நிலையில் எப்படி என்னால் விஷயத்தைக் கூறமுடியும்? என்னுடைய நிலையில் இருந்து ஒருக்கால் சிந்தித்துப் பார்' என்றான் சுகுமார்.

சிறிது நேர இடைவெளியின் பின்னர் ரவி பேசினான்: 'சுகுமார்', நீ விரும்பினால், உன் அக்காவும் சம்மதித்தால் பொருத்தம், வயது வித்தியாசம் பார்க்காமல் நான் அவளை செய்ய சம்மதிக்கிறேன்" என்றான் உறுதியுடன்.

ரவி அவளிலும் பார்க்க ஒரு வருடம் குறைவாகஇருந்தான். சுகுமார் அவனை அனுதாபத்தோடு பார்த்தான். ரவியைப்பற்றி உயர்ந்த எண்ணம் கவிதாவுக்கு இருப்பதை அவன் அறிவான்.

கவிதாவின் திருமணம் முடிந்துவிட்ட மகிழ்ச்சி அவன் முகத்தில் பிரதிபலிப்பதை ரவி கவனிக்கத் தவறவில்லை. இப்படியான தியாக சிந்தனையுள்ள இளைஞர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்களே என்று அவருக்கு ஆச்சரியம். விதியின் முன்னால் எந்த வித்தியாசமும் சவால் விட முடியாது அல்லவா.

(யாவும் கற்பனை)

# பம்பாய் விமான விபத்தும் எண் சோதிடமும்

இப்புத்தாண்டு முதல் நாளில் பம்பாயில் ஏர் இந்தியா விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதால் 213 பேர் உயிரிழந்த செய்தியை அறிந்திருப்பீர்கள். அதேபோல 11-10-1976 அன்று அதே பம்பாயில் இந்தியன் ஏர் லைன்ஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதையும் மறந்திருக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இந்த விபத்தில் தமிழ்த்திரைப்பட நடிகை ராணி சந்திரா உட்பட 89 பயணிகளும் 6 விமான ஊழியர்களும் எரிந்துவிட்டனர். ஒருவர் கூட பிழைக்கவில்லை. முழு உருவத்தோடு இல்லை. அவ்வளவு கோரமான விபத்து அது.

'ஈழநாடு' வாரமலரில் வெளியான 'எண்ணிலே வாழ்வு' என்ற கட்டுரைத் தொடர் மூலம் எண் சாஸ்திரத்தைப் பற்றி வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். அச்சாஸ்திரத்திற்கு ஆங்கிலத்தில் Numerology என்று பெயர். ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் பிராமணர்களால் வளர்க்கப்பட்ட இச்சோதிடம்பிற்காலத்தில் 'கீரோ' என்றரோமானிய அறிஞரால் வளர்க்கப்பட்டு உலகம்முழுவதும் பரவியது. இச்சோதிடம் மனித வாழ்க்கையில் எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை மேற்கொள்ள பம்பாய் விமான விபத்து மூலம் விளக்கி வாசகர்கள் மனதில் பதிய வைப்பதே எனது நோக்கம். நியூமரோலொஜி என்னும் இச்சாத்திரப்படி ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கும் ஒரு மதிப்பெண் உண்டு. இதை நீங்கள் எண்ணிலே வாழ்வு கட்டுரை மூலம் அறிந்திருக்கலாம்.

எண் சோதிடப்படி சனி கிரகத்தைக் குறிப்பிடும் எண் 8. பொதுவாக அது துரதிஷ்டமான எண் என்று சொல்வதுண்டு. (சிலருக்கு அதுவே அதிர்ஷ்ட எண்ணாகவும் இருப்பதுண்டு) 8 எண்ணின் துரதிஷ்டத்தன்மை பலருக்குப் பல சந்தர்ப்பங்களில் உண்டாகிறது. பம்பாய் விமான விபத்திலும் அந்த 8 எப்படியெல்லாம் பங்கு கொண்டுள்ளது என்பதைக் காண்போம்.

நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது. 95 பேர் இறந்த அந்த விபத்து நிகழ்ந்தது 11-10-1976-ம் திகதியன்று. அந்த எண்களை அப்படியே கூட்டிப்பாருங்கள். $1+1+1+0+1+9+7+6=26$. $2+6=8$.

அன்றையதினத்தின் கூட்டுத்தொகையே 8 ஆகும்.

அந்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 95 பேர். இதில் விமானச்சிப்பந்திகள் 6 பேர் போக மீதிப் பயணிகளின் எண்ணிக்கை 89. அதைக் கூட்டிப்பாருங்கள் $8+9+17$, $1+7=8$ இங்கும் சனியன் தொடரும் விடவில்லை.

விபத்துக்குள்ளான அந்த போயிங் விமானத்தின் எண் என்ன? என்று பார்க்கும்போது நம்முடைய வியப்பு அதிகரிக்கிறது அந்த விமானத்தின் எண் 737 ஆகும். $7+3+7=17$ $1+7=8$ இதுவும் சனியின் எண்தானே.

மேலும் விமானத்தில் பயணம் செய்த பெண்கள் மொத்தம் 17 பேர். $1+7=8$.

11-10-76 அன்று மாலை 6 மணிக்கு இவ்விமானம் புறப்பட்டபோது ஒரு கழுகு மோதியதால் அதுபழுதாகிக்கீழே இறங்கியது. கழுகு என்பதற்கு ஆங்கிலப்பதம் என்ன என்று பார்த்தால் விதிதான் கழுகு. வடிவில் வந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. கழுகு என்பதற்கு Eagle என்று ஆங்கிலத்தில் சொல்வர். இவ்வார்த்தைக்கு எண் சாத்திரப்படி கூட்டு எண்ணிக்கையைக் காண்போம்.

EAGLE
$5\ 1\ 3\ 3\ 5=17$. $1+7=8$

இது எல்லாவற்றையும்விட வியப்பானசெய்தி: இவ்விபத்து நடந்த ஊர் பம்பாய். அதன் கூட்டு எண்ணைக்கவனியுங்கள்.

BOMBAY.
$2.7\ 4\ 2\ 1.1=17.1+7=8$

இது இப்படி இருக்க பயணிகள் சிலரின் பெயரைக் காண்போம்,

D. SHIVRAM
$4.\ 3\ 5\ 1\ 6\ 2\ 1\ 4=26$. $2+6=8$.

MRS. D. SHIVRAM
$4\ 3\ 2\ \ 4\ 3\ 5\ 1\ 6\ 2\ 1\ 4=35$. $3+5=8$

CHANDRAN
$3\ 5\ 1\ 5\ 4\ 2\ 1\ 5=26$ $2+6=8$

G. D. RAMAYA
$3\ 4\ 2\ 1\ 4\ 1\ 1\ 1=17$. $1+7=8$

விபத்தில் எரியுண்டவர்களில் தமிழ் நடிகை ராணி சந்திராவும் ஒருவர் இவர் A. C. திருலோகசந்தரின் பத்ரகாளி என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டது. படம் வெளியாகும் போது இவர் இவ்வுலகிலேயே இல்லை. இவர் தனது கடைசி காலத்தில் தனது பெயரைக்

[7ம் பக்கம் பார்க்க]

## கி.பி. 1900-2000 கலண்டர்

கி. பி. 1900-ம் ஆண்டு முதல் கி. பி. 2000-ம் ஆண்டுவரையும் திகதி-நாட்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடிய கலண்டர் ஒன்றை மயிலிட்டி கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஆர். பேரின்பநாயகம் தயாரித்திருக்கிறார்: சோதிடர்களுக்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் உபயோகமான இக் கலண்டரும் விளக்கமும் அடுத்த வாரம் வாரமலரில் இடம் பெறும்.

[ஆ-ர்]

## ஆவியுலகத் தொடர்பு—20

# மறுபிறப்பு!

### வி. ரவிச்சந்திரன்

ஸ்தூல உடலை விட்டு ஆவி உலகம் சென்ற ஆத்மாவனது அங்கு சில காலம் கழித்த பிறகு பூமியில் அதுதன் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ற இடத்தில் மறுபடியும் பிறக்கின்றது. எல்லோரும் உடனே பிறந்துவிடுவதில்லை. சிலர் உடனே பிறக்கின்றனர். சிலரோ சில வருடங்கள் கழித்தும் பிறக்கின்றனர்.

எமர்ஸன்-பிளேட்டோ-பீத்தகோரஸ் முதலிய மேல்நாட்டுச் சிந்தனையாளர்கள் மறுபிறப்புக்கொள்கையை ஒப்புக்கொண்டனர். கிரேக்கர்களும் எகிப்தியர்களும் இதை நம்பினர். எகிப்திலுள்ள சில பிரமிடுகளை ஆராய்ச்சியாளர்கள் பூமிக்குள்ளிருந்து கண்டுபிடித்த போது அதிலிருந்த சவக்குழியில் மந்திர வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. மறுபிறப்பில் என்ன செய்வது? எங்கே செல்வது? என்பது போன்ற கட்டளைகள் அதில் அடங்கி இருந்தன.

இத்தகைய மறுபிறப்பு நமக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று ஆண்டவனிடம் முறையிட்டுப் பாடியுள்ளனர் நம்முடைய இந்துசமயப் பெரியோர்கள். பிறந்தவர்கள் அனைவரும் இறப்பது உறுதி ஆனால் இறந்தவர் அனைவரும் மீண்டும் பிறப்பது இல்லை. இவ்வுலக வாழ்வில் தானதர்மங்கள் போன்ற புண்ணியமான காரியங்களைச் செய்தவர்கள் பிறப்பற்ற மேல் நிலையை அடைகிறார்கள். மற்றவர்கள் மறு பிறப்பிற்கு வருகிறார்கள். அப்படி மீண்டும் பிறக்கும்போது அவர்களின் பழைய நினைவுகள் எல்லாம் மறந்து போகும். அதாவது ஆண்டவனால் மறக்கடிக்கப்படும் எல்லோருக்கும் முற்பிறவி நினைவுகள் இருக்குமாயின் வீண் குழப்பங்கள் தான் உலகில் ஏற்படும். இந்த உண்மையை நன்கு சிந்தித்துப் பாருங்கள்.

### முற்பிறப்பின் நினைவுகள்:

ஆனால் அபூர்வமாக ஒரு சிலர் முற்பிறவியின் நினைவுகளுடன் பிறக்கின்றனர். முற்பிறவியின் நினைவுகளாக அவர்கள் கூறியவைகளெல்லாம் சரி பார்க்கப்பட்டு உண்மையென்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. உலகில் பல நாடுகளிலும் பல பேர் முற்பிறவி நினைவுகளைக் கூறியிருக்கிறார்கள். வட இந்தியாவில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி முன் இதே 'ஈழநாடு' வாரமலரில் எழுதியிருந்தேன். அதைப் போன்ற வேறு சில உண்மைச் சம்பவங்களை இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

## ★ இறந்த சிறுவன் விழித்தெழுந்தான்

## ★ மகனுக்கே பிள்ளையாகப் பிறந்தார் தந்தை

## ★ முற்பிறப்பின் உறவினர்களை அடையாளம் கண்ட சிறுவன்

வட இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் முஜபர் மாவட்டத்தில் ரஸல்பூர் என்ற கிராமத்தில் ஜாஸ்பீர் என்ற சிறுவன் தன்னுடைய மூன்றாவது வயதில் ஒருநாள் இரவு திடீரென்று இறந்துவிட்டான். இருதயத் துடிப்பும்-நாடித் துடிப்பும் நின்றுபோன சில மணி நேரங்களில் அவை மீண்டும் தானாக இயங்க ஆரம்பித்தன. விழித்துஎழுந்த சிறுவன் இரண்டு நாட்களில் பூரணமாக தெளிவடைந்தான் ஆனால் இதன்பிறகு அவன் விசித்திரமாக நடந்துகொள்ள ஆரம்பித்தான். அவ்வீட்டில் உணவு உண்ண அவன்மறுத்துவிட்டான். தன்னைப் பிராமணப் பையன் என்று அறிவித்துக்கொண்ட அவன் ரஸல்பூருக்கு 22 மைல் தூரத்தில் உள்ள விதேஹி என்ற கிராமத்தில் வசிக்கும் சங்கர்லால் தியாகி என்பவரின் மகன் என்றும் சொல்லிக்கொண்டான்.

அவ்வீட்டில் அவன் உணவு உண்ண மறுத்ததால் ஒரு பிராம்மணப் பெண்ணைக் கொண்டு அவனுக்கு உணவு அளித்தனர். ஒருநாள் விதேஹியில் இருந்து பள்ளி ஆசிரியர் ஒருவர் ரஸல்பூருக்கு வந்தார். உடனே ஜாஸ்பீர் அவரை அடையாளம் கண்டுகொண்டு சங்கர்லால் தியாகியின் வீட்டு விஷயங்களைப் பற்றியும் விதேஹி கிராமத்து மக்களைப்பற்றியும் பேசத் தொடங்கினான். இது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவனை அந்தக் கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். கிராமத்தினர் பலரை அவன் அறிந்துகொண்டான். இதைக் கேள்விப்பட்ட ராஜஸ்தான் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர்பானர்ஜி இரண்டு கிராமங்களுக்கும் சென்று நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் விசாரணை நடத்தியபின்— விதேஹி கிராமத்தில் வசித்த சங்கர்லால் தியாகியின் 25 வயதுமகனின் மறுபிறப்பே ஜாஸ்பீர் என்று அறிந்து வெளி உலகிற்கு அறிவித்தார்.

### மகனுக்கே பிள்ளையானார்

கல்கத்தாவின் அருகில் உள்ள ஜம்புகூர் என்னும் ஊரில் ஒரு 18 வயதுப் பையன் சாகக் கிடந்தான். பையனின் பெற்றோர்கள் எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தார்கள். திடீரென்று ஒரு நாள் அந்தப் பையன் தன் முற்பிறப்பைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். முற்பிறப்பில் நான் ஒரு ரயில்வே அலுவலகம் ஒன்றில் வேலை செய்தபோது ஒரு வனைக் கொலை செய்தேன். நான் அவனைக் கண்டதுண்டமாக வெட்டினேன். ஓ, நான் அவனை எவ்வளவு துன்புறுத்தினேன். அந்தக் கர்மம் எங்கே போகும்? இவைகள் நடந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அப்போது சூக் தெருவில் ஒரு கண் குருடானதால் 'கானு' சார்ஜன்ட் என்று அழைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிதான் என்னைக் கைது செய்தவர்.

அடுத்த அறையில் தூங்குபவர் (தன் தந்தையைக் காட்டி) முன்பிறப்பில் என் மகன். அவன் எந்த விதத்தில் என்னை துயரத்தில் ஆழ்த்த முடியுமோ அவ்வளவும் செய்தான், அந்தக் கர்மத்தை அவன் உணரும்பொருட்டு நான் அவனுக்கே மகனாகப் பிறந்துள்ளேன் என்றான் அச்சிறுவன்.

(விசாரணை செய்ததில் சூக் தெருவில் அவன் வசித்ததும் அங்கு குருட்டு சார்ஜன்ட் என்று பெயர்பெற்ற பொலிஸ் அதிகாரி இருந்ததும் அவர் 50 ஆண்டுகளுக்கு முன் ஒய்வு பெற்றார் என்பதும் வெளியாகியது).

வட இந்தியாவில் பிஸெளலி என்னும் ஊரில் 1944ம் ஆண்டு மார்ச் 15ல் மத்திய கலாசாலைப் பேராசிரியரான பாபு பங்கேலால் சர்மா சாஸ்திரி எம். ஏ. அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அப்பையனுக்குப் பேச்சுவந்த சீக்கிரத்தில் அவன் மோகன்—மொரதாபாத்ஸரன்பூர் என்று தெளிவாக உச்சரித்ததோடு மோகன் சகோதரர்கள் என்றும் கூறினான். தன் பெயர் பரமாநந்த் என்றும் தான் மோகன் சகோதரர்கள் என்னும் பெயர்பெற்ற உணவுப் பண்ட விற்பனைக் கம்பனியின் உரிமையாளரான மோகன்லாலின் சகோதரன் என்றும் அக் கம்பனிக்கு ஸஹாரன்பூரிலும் மொரதாபாதிலும் கிளைகள் உண்டு என்றும் தான் தீராத வயிற்று வலியால் 1943 மே 3ம் தேதி இறந்துவிட்டதாயும் கூறினான்.

தன் உறவினர்கள் வெண்ணையும் ரொட்டியும் வாங்குவதைக் காணுந்தோறும் தனக்குச் சொந்தமாய் மொரதாபாதின் பெரிய ரொட்டித் தொழிற்சாலை உள்ளது என்று கூறுவான். கடை வீதியில் சில பெரிய கடைகளைக் காணும்போதெல்லாம் மொரதாபாதில் தன் கடை எந்தக் கடையையும் விடப் பெரிது என்பான். அடிக்கடி தன் பெற்றோர்களைத் தன்னை மொரதாபாத்துக்கு அழைத்துச்செல்லும்படி வற்புறுத்தினான். 1949ம் ஆண்டு முதலில், பிஸெளலியில் லாலா ரகு நந்தன் லால் என்பவர் மொரதாபாதில் உள்ள தம் உறவினருக்கு இச் சிறுவனைப் பற்றியும் அவன் மோகன் சகோதரர்களோடு தன் உறவைப்பற்றி வற்புறுத்திக் கூறுவதைப்பற்றியும் தெரிவித்தார். அவ்வுறவினர் மூலம் இதைக் கேள்விப்பட்ட மோகன்லாலும் அவரது உறவினர் சிலரும் பிஸெளலிக்கு வந்து பையனின் தந்தையைச் சந்தித்தார்கள். அச்சமயம் சிறுவன் வெளியூர் சென்றிருந்ததால் சந்திக்க முடியவில்லை எனவே அச் சிறுவனை மொரதாபாத்துக்கு அழைத்துவரும்படி கூறிச் சென்றனர். அதே போல பையனை அழைத்துச் சென்றனர். புகைவண்டியிலிருந்து இறங்கியவுடனே அப்பையன் தன் சகோதரனைத் தெரிந்து கொண்டு ஆலிங்கனம் செய்து கொண்டான். புகைவண்டி நிலையத்திலிருந்து மோகன்லால் வீடு செல்லும் வழியில் நகர மண்டபத்தைத் தெரிந்து கொண்டு தன் கடை அருகில் தான் இருக்கிறது என்று கூறினான். பையனைச் சோதனை செய்யும் பொருட்டு வேண்டுமென்றே கடையைத் தாண்டி சென்றனர். உடனே பையன் கடையைத் தெரிந்துகொண்டு கூச்சலிட்டான். பின்பு அவன் கடைக்கு எதிரிலுள்ள வீட்டை அடைந்து முற்பிறவியில் தன் பூஜைசாமான்களையும் பணப் பெட்டியையும் வைத்திருந்த அறைக்குள் நுழைந்தான். அறையில் நுழைந்த உடன் அவன் தாழ்ந்து நமஸ்கரித்தான்.

### பழைய சம்பவங்கள்

அவன் தன் முந்தைய மனைவியையும் உறவினர்களையும் தெரிந்து கொண்டு அவர்களைக் குறித்து தன் பழைய வாழ்க்கையில் சில சம்பவங்களை நினைவு கூர்ந்தபோது அக் காட்சிபரிதாபகரமாயிருந்தது. அச் சம்பவங்கள் உண்மை என்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். பரமாநந்த் இறக்கும்போது சிறுவனாக இருந்து இப்போது பெரிய பையனாக உள்ள தன் மூத்த மகனை மட்டும் கண்டுகொள்ள இயலவில்லை. எல்லாச் சகோதரர்களும்ஒன்றாய் உட்கார்ந்து எலுமிச்சைச்சாறு முதலியவற்றைப் பருகுவது வழக்கம் என்று அவன் கூறிய போது சகோதரர்கள் அனைவரும் அழலானார்கள்.

பிறகு சிறுவன் கடைக்குச் சென்று சோடா பானம் தயார் செய்யும் விதத்தை விளக்கிக் காட்டினான். முற்பிறவியில் தன் சகோதரனை திரு கரம் சந்தால் நடத்தப்படும் விக்டரி சிற்றுண்டிச்சாலைக்குப் போக விரும்பினான். அவன் அக்கட்டிடத்துக்கு வழிகாட்டிச் சென்று மேல்மாடி ஏறி தற்போது கட்டப்பட்ட அறைகள் முன்பு இல்லையென்று உடனே கூறினான்.

பிறகு மொரதாபாதின் பணக்காரர்களுள் ஒருவரான ஸரஹூநந்தலால் சரன் என்பவர் சிறுவனைத் தமது காரில் உட்காரவைத்து நகரத்தில் அவனுக்குத் தெரிந்த இடங்களையெல்லாம் அடையாளம் காட்டச்சொன்னார். பையன் தான் உயிரோடு இருந்தபோது கடைக்கு வழக்கமாக வருபவர்களையும் நகரின் பல இடங்களையும் அடையாளம்கூறினான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு பையனை திரும்ப ஊருக்கு அழைத்துச் செல்வது பெரும்பாடாய் ஆகிவிட்டது பழைய உறவினர்களையும் கடையையும் விட்டுப்பிரிய அவன் விரும்பாததால் தூங்கும்போது இரவோடு இரவாக கொண்டு செல்லப்பட்டான்.

பையனாவது அவனது தந்தையாவது இதற்குமுன் மொரதாபாத் போனதே இல்லை. அவன் கூறிய விஷயங்கள் அனைத்தும் உண்மையென்றும் நிரூபிக்கப்பட்டு மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. எல்லாவற்றையும் அவன் தெளிவாக எடுத்துரைத்தான். ஒரு முறைகூடத் தடுமாறவில்லை.

உலகின் பல பாகங்களிலும் பல நாடுகளிலும் மறு பிறப்பைப்பற்றிய பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்து கொண்டிருக்கின்றன அனைத்தையும் கூறிக்கொண்டிருந்தால் இப்பகுதி இன்னும் விரிவாகும் என்பதால் இந்த உதாரணங்களோடு நிறுத்திக் கொள்கிறேன். பானை சோற்றில் ஒரு சோற்றைப் பதம் பார்த்தால் போதாதா?

---

## இரவே வருக!

இருண்ட இரவே!
இன்னுமேன் வரவில்லை?
எந்தன் காதோர
இன்பக் கதைகள்
ஏனையோர் காதில்
கேளாது சொல்லும்
கீர்த்திகள் கற்றவன்
ரோமியோ...ஓ!

போதையில் ஊறிய
போதையாய் மாறுவேன்!
கொல்லும் பகலே
தள்ளிப் போ!
வெல்லும் இரவை
விரைந்து வரச்சொல்
வருகையில்
ரோமியோவை
வாரிக்கொள்

எந்தன் அன்பனை
மணந்துளேன் எனும் ஓர்
இறுமாப்பில் உழல்
கிறேன்
இருப்பினும்
அந்த இரவின்
அமுதச் சுவையை
அருந்த விலையே
இன்னும்...

ஏ! இருண்ட இரவே
இன்னுமேன் வரவில்லை...நீ!

[ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ ஜூலியட்' டிலிருந்து]

தமிழ் வடிவம்:
கலைவாதி கலீல்

---

கலைஞரின்

## 'நெஞ்சுக்கு நீதி

[நமது சென்னை நிருபர்]

கலைஞர் கருணாநிதி சில வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் திரை உலகைத் திரும்பிப் பார்க்க ஆரம்பித்துள்ளார் நெஞ்சுக்கு நீதி என்ற பெயரில் கருணாநிதி கதை, வசனம் எழுதும் வண்ணப்படம் ஒன்றை சிவலீலா சினி ஆர்ட்ஸ் பட நிறுவனம் தயாரிக்கிறது. கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ட் செய்கிறார்கள், கதாநாயகனாக ஜெய்சங்கர் நடிப்பார் என்று தெரிகிறது.

---

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர
நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர, நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

## ஒரு தொலைபேசிப் பேட்டி

### லண்டனிலுள்ள

# ஈழம் தமிழ் மாணவர் பொது மன்றம்

**வி. க. அருளானந்தன்**

டெலிபோன் நம்பரை சுழற்றுகின்றேன் ... எதிர்ப்புறத்திலிருந்து 'ஹலோ... கெஸ்...ஓஃபீஸ்' என ஆங்கிலத்தில் கூறுகின்றார் ஒருவர். இதுதான் இன்று இங்கிலாந்து தமிழ் மாணவர்களிடையே இயங்கி வரும் 'ஈழ மாணவப் பொது மன்றத்தின்' தலைமை அலுவலகம். இதன் எல்லா ஆங்கில முதலெழுத்துக்களின் சேர்ப்புத்தான் 'கெஸ்' என்ற பெயர்.

இங்கு நேரம் ஓடுகின்றது. நாமும் அத்தோடு ஓடிக்கொண்டே இருக்கின்றோம். எனவே எவரைச் சந்திப்பினும் சந்திக்கு முன்னர் அவருடைய வசதிக்கேற்ப நேரமும் குறித்த பின்னர்தான் எமது சந்திப்பு சாத்தியம். இப்படியான ஒரு சூழ்நிலையிலும் மாணவரின் நலனுக்காக இரவு, பகல் தொடர்ந்து பணியாற்றும் அவர்களுடைய சேவையைப் பாராட்டத்தான் வேண்டும்.

வெளி உலகைப் பொறுத்த வரை எமக்கு நாம்தான் துணை. ஏனெனில் உற்றார், உறவினர் எல்லோருமே இலங்கையில் வாழ, படிப்பு என்ற சூழ்நிலையில் இங்கு தனிமனிதர்களாகக் கட்டுப்பட்டுள்ளோம். இந்த நிலையில் மாணவர்களுக்கு ஏற்படும் இன்னல்களோ பல. அவற்றிற்கெல்லாம் உற்ற நண்பனாக இப் பொதுமன்றம் செயல்படுவதனைக் காண மகிழ்ச்சியாகவே இருக்கின்றது.

எமது பிறந்த நாட்டில் கடந்த கால சம்பவங்களினால் தமிழினம் பெரியதொரு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது.

பெற்ற தாய், தந்தைக்கே மகன் தனது சிந்தனையைக் கூறப்பயப்படும் காலம். காரணம் அவன் சிந்தனைக்கு அரசாங்கம் தரும் பெயர் நாட்டை இரு கூறுக்குகிறார்கள் என்பதாகும். பிரிவினைக்கு நாம் அனுமதிக்கமாட்டோம் என்பது அரசின் குரல். இளைஞர்கள் பயங்கரவாதிகள் எனவும் கருதப்படுகிறார்கள். ஒருவித அரசியல் தந்திரம் என்றுதான் இதனைக் கூறவேண்டும்.

உலக நாடுகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் விடுதலை வீரர்கள், பிறந்த மண்காக்கப் புறப்பட்ட உத்தமர்கள். இவற்றில் எது சரியான அபிப்பிராயம் என்பதை நிச்சயிப்பது காலம்.

இன்று எத்தனையோ பெரிய வல்லரசு நாடுகளையெல்லாம் நடுங்க வைக்கிறார்கள் 'பாலஸ்தீன விடுதலை வீரர்கள்!' எங்கு பார்க்கிலும் விமானக் கடத்தல், விபரீத செயல்கள்.

இவற்றைவிட இன்று இங்கிலாந்து நாட்டில்கூட பலவருடங்களாக எங்கும் பயங்கர வெடிவிபத்து, துப்பாக்கிச் சூடு, கடத்தல் போன்றவற்றினை நடாத்தி இங்கிலாந்து அரசியலாளருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் வட அயர்லாந்து விடுதலை வீரர்கள்.

ரொடீஜியாவில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து கறுப்பர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்திவருகிறார்கள்.

இவையெல்லாம் அவர்கள் தாம் பிறந்த மண்மீது கொண்டுள்ள என்றும் மாறாத பாசத்தினால் ஏற்படும் உணர்ச்சிப் பிரவாகங்களாகும்.

தமது இனத்தின், சமுதாயத்தின், பிறந்த மண்ணின் விடுதலைக்கு இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் நடைபெற்று வரும் வேளையில், எமது சமுதாய வளர்ச்சிக்கும், சுபீட்சத்துக்கும் வெளிநாட்டிலிருந்து சேவையாற்றும் ஒரு சிலரை உங்களுக்கு அறிமுகம்செய்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### அங்கீகாரம் பெற்றது

இங்கிலாந்தில் செயல்பட்டு வரும் இந்த ஈழ மாணவ மன்றத்தைப் பற்றி சிறிது தெரிந் ... டு அதன் தலைவருடன் டெலிபோனில் உரையாடலாமே!

அண்மைக் காலத்தில் சர்வதேச மாணவர் சங்கத்தினால் அங்கீகாரம்பெற்ற ஒரு சட்ட அமைப்பின்கீழ் இயங்கிவரும் 'ஈழத் தமிழ் மாணவப் பொது மன்ற'த்தின் தலைவர் திரு. இ. சோதிநாதனுடன் சில மணி நேரம் உரையாடினேன். அவர் தந்த விபரம் வருமாறு:

கடந்த ஆயிரத்து தொளாயிரத்தி எழுபத்தேழாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உலகெங்கணும் வாழும் தமிழ்பேசும் மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவ மகாநாடு இலண்டன் ரோயல் கொமன்வெல்த் சபையில் நடைபெற்றது. அம் மகாநாட்டில் பங்கு கொண்டவர்களின் ஏகோபித்த ஆதரவுடன் இலங்கைத் தமிழர் நிலை தொடர்பாக

## தாயகப் பிரச்னைகளில் அதன் நோக்கமும் செயற்பாடுகளும்

கீழ்க்காணும் சங்கற்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### சங்கற்பங்கள்

● மலையகத் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்னை, இலங்கையின் வடக்கு, கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்னையோடு பின்னிப் பிணைக்கப்படவேண்டும். எனவே இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கான எந்த ஒரு தீர்க்கமான தீர்வும் இரு பகுதியினரதும், ஒருமித்த ஆதரவு மூலமே தீர்வுகாணப் படல் வேண்டும்.

● சிறீ லங்காவில் வாழும் தமிழ்பேசும் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்காக மலையகத்தொழிலாளர்கள், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுடன் இணைந்து தமக்கென ஒருமாநில அமைப்பை நிர்ணயிக்கவேண்டும்.

● இம்மாநிலம் சாதி, மத, பிரதேச வேறுபாடற்ற சமத்துவ சமதர்ம ஆட்சியாக அமையவேண்டும். இதனை "ஈழம்" என அழைக்கவேண்டும். அங்கு வாழ் மக்கள் 'ஈழவர்' என அழைக்கப்படல் வேண்டும்.

● ஈழத்தாயகத்தில் நடைபெறும் எம்மக்களின் போராட்டத்தில் தமிழ் மாணவரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கான பரிபூரண ஆதரவை வெளிநாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள் அளிக்க வேண்டும்.

அத்தோடு தாங்கள் கல்வி பயிலும் நாடுகளில் தங்களின் சலுகைகளையும், உரிமைகளையும்பேணிக்காக்கவும் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு தம்மாலான ஒத்துழைப்புக்கு ஸ்தாபனரீதியில் உழைக்கபலம் வாய்ந்த மன்றம் அவசியம்.

● உலகிலுள்ள எல்லா முற்போக்குச் சக்திகளுக்கும் ஏகாதிபத்தியத்தையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்க்கும் விடுதலை இயக்கங்களுக்கு தமது ஆதரவை நல்கவேண்டும்.

இம் மன்றத்தின் நோக்கங்கள் வருமாறு:

● மேலே கூறப்பட்ட சங்கற்பங்களையும், பிரகடனத்தையும்ஏற்றுக்கொள்ளலும், வெளிநாடுகளில் கல்வி பயிலும் அனைத்துலக தமிழ் பேசும் மாணவர்களையும் ஒன்றுபடுத்துவது.

● இலங்கைத்தமிழ்பேசும் மாணவர்களை அவர்களது திறமைகளுக்கு ஏற்ப கல்வி, விஞ்ஞானத்துறைகளின் மேம்பாட்டுக்கு உழைக்கவும், ஈடுபடவும் ஊக்குவிப்பது.

● "ஈழவ"ருக்கு சர்வதேச அரங்கில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்துவது.

● மேற்குறிப்பிட்ட சங்கற்பங்களையும், பிரகடனங்களையும் பூரணப்படுத்துவதற்கு அவசியமான ஸ்திரமான அமைப்புக்களையும், ஸ்தாபனங்களையும் உருவாக்குதல்.

● ஈழம்பற்றிய ஆய்வுகளிலும் புனருத்தாரணத்திலும் அக்கறையுடன் பங்குபெறுதல்.

● தேசிய சர்வதேச மாணவர் அமைப்புகளுடனும் முற்போக்கு ஸ்தாபனங்களுடனும் பண்பாட்டு, அறிவியல் பிணைப்புக்களை ஏற்படுத்திக்கொள்வது.

### பல்வேறு குழுக்கள்

இவற்றில் செயல்பாட்டுக்கென நிர்வாகக் குழு, பொது மன்றக் குழு, சர்வதேசக் குழு என்ற பிரிவுகளும் அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்படும்.

### டெலிபோன் உரையாடல்

""ஹலோ...நான்! உங்கள் மன்றத்தலைவருடன் பேச முடியுமா?'' என்றேன். ''யேஸ் தலைவர்தான் பேசுகின்றேன்''. என்றார். அதனைத் தொடர்ந்து உரையாடல் தொடர்கிறது.

நீங்கள் எந்த முக்கியமான நோக்குடன் செயல்பட்டுவருகிறீர்கள்?

'குறிப்பாகக் கூறப்போனால், இன்றைய நிலைமையைப் பொறுத்தமட்டில் எமக்குள்ள ஒரே ஒரு மாபெரும் பிரச்னை இலங்கை வாழ் தமிழ் மக்கள் பிரச்னைதான். எனவே உலகத் தமிழ் மாணவர்களின் ஏகோபித்த ஆதரவைத் திரட்டி. இலங்கைத் தமிழ் மக்களுடைய ஆக்கபூர்வ முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுப்பதே நோக்கம்.'

நீங்கள் ஆக்கபூர்வ வழிகள் எனக் குறிப்பிடுவது?...

'தமிழினத்தின் பெரும்பான்மையினரின் கொள்கைகளையும் அவர்களின் செயல்முறைகளையும், சர்வதேச அரங்கத்துக்கு அறியத்தருவதோடு, மாணவர்களின் நலன்களின் எல்லைக்குட்பட அவர்களை மக்களின் மேம்பாட்டுக்கு உழைக்க ஊக்கப்படுத்துதல்.'

மாணவர்களை இவைகளில் ஈடுபடச்செய்ய என்ன விதமான வழிமுறைகளை கையாள முடியுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

'பெரும்பாலும் இன்று இங்கிலாந்து நாட்டில் கிட்டத்தட்ட ஏழாயிரம் இலங்கைத் தமிழ் மாணவர்களும், இருபதினாயிரம் தமிழ் மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். மாணவர்களைப் பொறுத்தமட்டில் பாடசாலைகளில் 'ஈழம் மாணவர் மன்றங்களை' அமைத்து, மக்களிடையே கலந்துரையாடல்கள் போன்றவற்றினை ஒழுங்குசெய்தும், அவர்களுக்கு எம் தாயக மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய சிறப்பான வழிவகைகளைக் காணக்கூடிய சிந்தனைகளை உருவாக்குதல்.'

### தனிநாட்டுக் கொள்கை

தாயக மக்களின் தீர்க்கமான முடிவு என்ன என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

'இது கடந்த கால பொதுத் தேர்தல் மூலம் எல்லோருக்கும் தெளிவுபடுத்தப்பட்ட தனிநாட்டுக் கொள்கைதான்.'

நீங்கள், உலகத் தமிழ்மக்கள் இது போன்ற தனிநாட்டுக் கொள்கைக்கு என்ன வழியில் செயலாற்ற முடியும் என எதிர்பார்க்கிறீர்கள்?

'நிச்சயம் தனிநாடு அமையப் போவதென்றால் இலங்கையில்தான், எனவே பெரும்பான்மை முயற்சிகளும் நடைபெறவேண்டிய இடமும் இலங்கையே. எனவே உலகத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், அந்தந்த நாட்டின் அனுதாபங்களை எமது மக்கள் முயற்சிக்கு ஏற்படுத்திக்கொடுப்பது தங்களால் ஆன நிதி உதவி பெற்றுக்கொடுப்பது. குறிப்பாகக் கூறின் கடந்த இனக்கலவரத்தின் போது, லண்டன் இலங்கைத் தூதுவரகத்தின் முன்னால் எமது மன்றம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, பல உலக நாட்டுக்கும் எமது நிலைமையை எடுத்துரைக்க ஒரு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்தோம்.

தொடர்ந்து, கடந்த வாரம் எமது கலந்துரையாடலில் ஆபிரிக்க நாட்டு பொதுநலத்துறை பேரறிஞர் பலருடன் எமது மக்களுக்குத் தொடர்புகள் ஏற்படுத்தினோம், தொடர்ந்தும் இவைபோன்ற முயற்சிகளை மேற்கொள்வோம்.

'மிக்கநலம்! மாணவ மன்றத் தலைவரே உங்கள் ஆக்கபூர்வ வழிகளுக்கு நல் வாழ்த்துக்கள்' எனக் கூறி தொலைபேசியை வைக்கிறேன்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கடந்த பல வருடங்களாக இங்கிலாந்து மாணவர்களிடையே ஒரு மன்றத்தினை அமைத்து செயல்பட முன்னின்று உழைத்து, இப்போது அதன் பலனை முழுமையாக்கி செயல்பட்டுக் கொண்டுமிருப்பவர்.



வாடைக்காற்றில் டாக்டர் இந்திர குமார், கே. கந்தசாமி ஆகியோர் தோன்றும் ஒரு கட்டம்

## வாடைக்காற்று விரைவில் திரைக்கு வருகிறது!

'வாடைக்காற்று' திரைப்படம் தமிழ்ப் புதுவருடத்துக்கு முன் திரைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செங்கை ஆழியானின் மூலக் கதையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப்படத்தில் இலங்கையின் முன்னணி நட்சத்திரங்கள் பலரும் நடித்து வருகிறார்கள்.

எஸ். எஸ். கணேசபிள்ளை, கே. ஏ. ஜவாஹர், லடிஸ் வீரமணி, எஸ். யேசுரட்ணம், கே. எஸ். பாலச்சந்திரன், ஏ. ஈ. மனோகரன், டாக்டர் இந்திரகுமார், சந்திரகலா, வசந்தா அப்பாத்துரை போன்ற குறிப்பிடத்தக்க கலைஞர்கள் இதில் பங்கேற்றிருக்கிறார்கள்.

ஈழத்து இரத்தினம், சில்லையூர் செல்வராசன் ஆகியோர் எழுதியுள்ள பாடல்களுக்கு வி. முத்தழகு, சுஜாதா அத்தநாயக்க, ஜோசெப் ராஜேந்திரன் ஆகியோர் குரல் கொடுத்துள்ளனர்.

நடனப் பொறுப்பை கலைஞர் வேல் ஆனந்தன் ஏற்றிருக்கிறார்.

தனித்தன்மையான கதை அமைப்பைக் கொண்ட இப்படத்தில் ஸ்டன்ட் காட்சிகளும் இடம் பெறுகின்றன.

இதன் டைரக்‌ஷன் பொறுப்பை பிரேம்நாத் ஏற்றுள்ளார்.

# இந்திய சாகித்ய அகாதமி!

(சென்னவார... டர்...)

ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், டாக்டர் ஜாகிர் ஹுசேன் ஆகியோர் சாகித்திய அகாதமியின் தலைமையை ஏற்றனர்கள். சாகித்திய அகாதமியின் தற்போதைய தலைவர் டாக்டர் கே. ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகக் குழுவால் தன்னையே நிர்வகித்துக் கொள்ளும் அகாதமி 22மொழிகளை அங்கீகரித்துள்ளது. அதில் ஆங்கிலத்தோடு மைதிலி, டோக்ரி, மணிபுரி, ராஜஸ்தானியும் அடங்கும்.

அங்கீகரிக்கப்பட்ட மொழிகளிலிருந்து பத்துப்பேர் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு தன் மொழியிலிருந்து பிறமொழிகளுக்கும், உலகில் உள்ள பல்வேறு மொழிகளுக்கும் மொழிபெயர்க்கத்தக்க சிறந்த நூல்களைத் தேர்தெடுத்துச் சிபாரிசு செய்கிறது.

கம்ப ராமாயணத்தில் அயோத்தியா காண்டமும், உ. வே. சாமிநாத ஐயரின் சுய சரிதையான, என் சரித்திரமும் பிற மொழிகளில் மொழிபெயர்க்கத் தமிழில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நூல்களில் சில. ஆனால் பிற மொழியினர் குறிப்பாக வங்க, மலையாள மொழியினர் சாகித்திய அகாதமியைப் பயன்படுத்திக் கொண்டதுபோல் பிற இந்திய மொழியினர் யாரும் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது அகாதமியின் தகவல் அறிக்கைகளைப் பார்க்கும் போதே தெரிகிறது.

அகாதமியின் உலகின் பல்வேறு மொழிபெயர்ப்புத் திட்டத்திற்கு. சங்க இலக்கியத்தின் ஒரு பகுதிகூடப் பரிந்துரைக்கப்படவில்லை என்பது மிகவும் வேதனை தருவதாகும். உலக மொழிகளுக்கு மொழிபெயர்க்கும்திட்டத்தில், தகழி சிவசங்கரன் பிள்ளையின் 'செம்மீன்' நாவலும், 'பொம்மலாட்டம்' மாணிக் பந்தோபத்தியாயாவின் வங்க நாவலும், மராட்டிய எஸ். என். பென்சேவின் காரம் பிச்சபாவும், விபூதி பூஷண் பந்தோபத்தியாயாவின் பதேர் பாஞ்சாலியும், பிரேம்சந்தின் இந்தி நாவலான கோதானும் அடங்கும். பங்கிம்சந்திரர் கிருஷ்ணகாந்தன் உயிலும் இடம்பெற்றுள்ளது

## 'ஜெயபாலன்'

மற்றும் உர்துவிலிருந்து மூன்று முஹல் கவிஞர்கள், பாசனின் அவிமராக என்னும் துக்காராம் உபதேசங்கள், நாடகம், மராட்டியிலிருந்து வித்யாபதி பாடல்கள், தமிழிலிருந்து சிலப்பதிகாரம், கம்ப ராமாயணத்தில் அயோத்தியா காண்டம் ஆகியவை இதில் அடங்கும்.

சாகித்ய அகாதமியின் குறிப்பிடவேண்டிய பணிகளில் ஒன்று இருபதாம் நூற்றுண்டில் வெளியான இந்திய நூறடைவை பிரசுரிக்கும் மிகப் பெரிய பொறுப்பை மேற்கொண்டதாகும். "இந்திய இலக்கிய நூறடைவு" என்ற வரிசையில் இந்த நூற்றுண்டின் துவக்கத்திலிருந்து 1953 வரையின் ஆஸாமி, வங்காளி, ஆங்கிலம், குஜராத்தி ஆகிய மொழிகளில் வெளியான நூல்களின் விவரங்களடங்கிய முதல் தொகுதி 1962-ல் வெளிவந்தது. இரண்டாவது தொகுதி 1966-ல். வெளிவந்தது. அதில் ஹிந்தி, மலையாளம், கன்னடம். காஷ்மீரி மொழிகளில் வெளியான நூல்களின் விவரங்கள் இடம் பெற்றன.

மராட்டி, ஒரியா, பஞ்சாபி, சம்ஸ்கிருத மொழி நூல்களின் தகவல்பற்றிய மூன்றுவது தொகுதி 1971-ல் வெளியிடப் பட்டது.

1974-ல் வெளிவந்த நான்காவது தொகுப்பில் தமிழ், தெலுங்கு, இந்தி, உர்து நூல்களின் விவரங்கள் அடங்கி உள்ளன. மைதிலி, கொங்கணி, டோக்ரி, மணிபுரி, நேபாளி, ராஜஸ்தானி ஆகிய மொழிகளுக்கான தொகுதி தயாரிப்பில் உள்ளது.

கல்கத்தா தேசிய நூலகத்திலிருந்து பெறும் விவரங்களை ஒழுங்குபடுத்தி சாகித்ய அகாதமி ஆங்கிலத்தில் இந்நூல்களைத் தருகிறது.

இந்திய இலக்கியக் கர்த்தாக்கள் என்ற பொதுத் தலைப்பில் நவீன இந்தியாவை உருவாக்குவதில் குறிப்பாகஉழைத்தவர்களையும் பழைய இலக்கிய ஆசிரியர்களையும் இந்தியர் அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் நோக்குடன் சிறு நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடுகிறது. பிறகு இந்நூல்கள் பல்வேறு இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. தமிழிலிருந்து இளங்கோ. கம்பர், நம்மாழ்வார், மாணிக்கவாசகர் பற்றிய நூழுகள் எழுதப்பட்டுள்ளன.

ஆஸாமிய கவியான லட்சுமிநாத் பேஸ்பருவா, தற்கால இந்தி நாவல் சிறுகதை இலக்கியத்தின் முன்னேடியான பிரேம்சந்த். உர்து மகாகவி தாலிஃப், சீர்திருத்தவாதியும், இலக்கிய கர்த்தாவுமான ஆந்திராவைச் சேர்ந்த வீரேசலிங்கம், முதல் மலையாள நாவலாசிரியரான சந்து மேனன். மகாகவி குமாரன் ஆசான், மராட்டியக் கவிதையில் புதுயுகங்கண்ட கேசவ சுதர், வங்காளத்தின் குவாஸி நஸ்ருல் இஸ்லாம், கவியோகி அரவிந்தர் போன்று ஒவ்வொரு இந்திய மொழிக்கும் வளமையும் செழுமையும் சேர்த்தவர்கள் இடம்பெறுகிறுர்கள். சம்ஸ்கிருத நூல்களின் தொகுப்பை முறைப்படுத்தி வெளியிடும் திட்டத்தின்கீழ் அகாதமி, வேத சாஸ்திரங்களின்தொகுப்பையும், இதிகாச-புராணங்களின் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறது. மற்றும் புத்தர் போதனைகள், காவியங்கள். நாட்டியங்களின் தொகுப்புகளையும் அகாதமி கொண்டு வந்திருக்கிறது. மகாகவி காளிதாசன் படைப்புகளை விமர்சனக் குறிப்புகளோடு சேர்ந்த நூல்களாக டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் சாகித்ய அகாதமி வெளியிட்டது.

பழைய இந்திய இலக்கியங்களை உலக மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் அறிமுகப் படுத்துவதோடு நவீனகாலத்து இந்திய இலக்கியப் படைப்புகளைக் கொண்டுவருவதில் சாகித்ய அகாதமி மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. தேர்ந்தெடுக்கும் தொகுப்பாளரின் குறைபாடுகள், விருப்பு-வெறுப்புகள் பல நேரங்களில் தொகுதிகள் சரியாக அமைய உதவாவிட்டாலும் ஒருமொழியில் நிகழும் இலக்கிய முயற்சிகளைத் தெரிந்துகொள்ள அகாதமிதான் பெரிதும் துணைசெய்கின்றது.

இந்தி, ஆஸாமி, கஷ்மீரி, மலையாளம், ஒரியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, உர்து, பாலி ஆகிய மொழிகளில் கவிதைத் தொகுப்புக்கள் அகாதமி ஆதரவில் வெளியாகியுள்ளன.

கவிதைத் தொகுப்புப் போலவே சிறு கதைகள், ஓரங்க நாடகங்களையும் அகாதமி வெளியிட்டு வருகிறது. ஒரு மொழியின் சிறுகதைத் தொகுப்போ ஓரங்க நாடகத் தொகுப்போ பிற மொழியினருக்குப் பயன்படும்படியாக மொழிபெயர்க்கப்படுவதால் ஒவ்வொரு மொழியினரும்—இன்னொரு மொழியில் நடைபெறும் நவீனத்துவம் பெற்ற சோதனை முயற்சிகளைத் தெரிந்து கொள்வது சாத்தியமாகிறது.

தமிழ் சிறுகதைக் களஞ்சியம், குஜராத்தி, வங்க, கன்னட, தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் தொகுப்பாசிரியர் காலஞ்சென்ற டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார்.

1972-ம் ஆண்டில் சாகித்ய அகாதமி திபெத்திய-ஹிந்தி மொழிக்கான அகராதியை இரு பாகங்களாக வெளியிட்டது. பாலி. சம்ஸ்க்ருதம், திபெத்தியம், ஹிந்தி, ரஷ்ய

[7ம் பக்கம் பார்க்க]

## 'முத்தத்தின் சத்தங்கள்'

[நமது சென்னை நிருபர்]

பாலு சினி ஆர்ட்ஸ் பட நிறுவனம் 'சட்டம் என் கையில்' என்ற படத்தை தயாரித்துவருகிறது. டி.என். பாலு கதை வசனம் எழுதி டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் கமலஹாசனும், பிரெஞ்சு நாட்டழகி காதரின் என்பவரும் முத்தமிட்டுக் கொள்ளும் காட்சி (ஆங்கிலப் படம் போல) இடம்பெறுகிறது. இப்படம் வெளியானல் தமிழில் வெளியாகும் முதல் முத்தம் அதுவாகத்தானிருக்கும்.

அடுத்து டி. என். பாலு 'முத்தத்தின் சத்தங்கள்' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிருர். இந்தப் படத்தின் வெளிப்புறக்காட்சிகள் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் படமாக்கப் படுகிறது. எதிர்வரும் மே மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது.

## ஒலியோசை நாடகம்

# நடுத்தீர்வை

[இசை—மூன்று]

களம்: ராசம்மா குடிசை

ஐயாத்துரை: [இருமிய வாறு] புள்ள ரஞ்சிதம். இன்னத்தங்கச்சி எங்க போட்டுது? அம்மாவை இஞ்ச ஒருக்கா வரச்சொல்லுங்கோ.

ரஞ்சிதம்; [சத்தமாக] அம்மாணேய், அப்பா உங்களை வரட்டாம்.

ராசம்மா: [தூரநின்று] கூப்பிட்டது எனக்குக் கேட்டது. பொறுங்கோ குடுவைக்க போட்ட குடிநீரை வடிச்சுக் கொண்டு வாறன்.

ஐயா: [தனியாக] ராசம்மா என்ன கறுமஞ்செய்துதோ... பாவம் என்னலயும் பிள்ளையளாலயும் நல்லாக் கஸ்டப் படுது... ராசம்மாவின்ர தேப்பன் சொன்னதுபால சிவலிங்கத்தாரைக் கட்டியிருந்தால் ராசம்மா நல்லநீரோசையாய்ச் சிவிச்சிருப்பா ... செல்லம்மாவுக்குத்தான் அந்த யோகம் அடிச்சிருக்கு...

ராச: என்னது யோகம் அடிச்சிருக்கோ... அ தாருக்கு...?

ஐயா: அப்பிடிஒண்டுமில்லை.. நான் உம்மட்ட ஒரு விஷயம் கேக்கவேணுமெண்டு நினைச்சனுன்...

ராச: என்ன சங்கதி, இருந்தாப்போல இப்படிஒருநினைவு.

ஐயா: இருந்தாப்போல எனக்கும் 'திடீ'ரெண்டு ஏதும் ஆகியிட்டா, நீர் என்ன செய்வீர்?

ரச: [ஏக்கமாக] அது ..என்ன சகுனக் கதைபேசுகிறியள்? அது கிடக்க, எனக்கே அப்பிடிஒண்டு நடந்தால் நீங்கள் என்ன செய்வியள்?

ஐயா; அதுக்கில்ல. ராசம்மா ஒவ்வொருதரும் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி யோசிக்கிற தில்லையா?

ராச: [எரிச்சலாக] சும்மா மனசை அலட்டிக்கொள்ளாமல் கிடவுங்கோ ... கைகால் இருக்கேக்க என்ன பயம்?

ஐயா: அதுசரி, பிள்ளையள் பசியால வாடிப்போச்சுது. ஒருக்காச் சிவலிங்கமண்ணை வீட்டுக்குப் போய் வாருமன்?

ராச: [அதிர்ந்து] அ...சிவலிங்கத்திட்ட நான் இனிமேல் போய்க் கேக்கமாட்டன்.

ஐயா: கடனெண்டு கேட்டாலும் அது என் உழைப்புப் பணம்தான். அந்தாளிட்டக் கேக்கிறதில பிசகில்லை.

## எஸ். அகஸ்தியர்

ராச: உங்களுக்கு விஷயம் தெரியாது. அந்தாள் ஒரு சரியான வஞ்சகன். அதைத் தெரிஞ்சால் போகச்சொல்ல மாட்டியள்.

ஐயா: அப்பிடிச் சொல்லக் கூடாது. அந்தாள் நல்ல கடவுள் பக்திக்காறன். குடும்பமே நல்ல சமயப்பற்றுள்ளது.

ராச; (அழுத்தமாக) இப்பிடித்தான் எல்லாரும் சொல்றவை. செல்லம்மாவும் சிவலிங்கமும் உப்பிடிச் சொல்லித்தான் ஊரில வட்டி கறந்து ஏழையளைப் புழியினம்.

ஐயா: எண்டாலும், ஆபத்துக்கு இரங்கி உதவுறவங்களை உப்பிடி எழுந்தமாச் சொல்லக் கூடாதுராசம்மா.

ராச: நாங்கள் படுக்கையில் கிடக்கேக்க தந்த காசுக்காக வட்டிக்கு வட்டி வாங்கினம். வட்டி வாங்கிறவன் நரகத்துக்குப் போவனெண்டிருக்கே. இவையே இரங்கிற ஆட்கள்?

ஐயா: நீர் சொல்றதும் சரிதான். எங்கட நிலவரத்தை நினைச்சால் இதைச் சொல்லிக் கொண்டிருக்க ஏலுமே? [ஏதோ சரசரக்கும் ஒலி] ஆரோவருமாப்போல கிடக்கு.

செல்லம்மா: [செருமிக் கனைத்தபடி] தார் வீட்டில? கதவைப பூட்டிக்கொண்டு கிடக்கிறியளே, எழும்பி வெளியால வாருங்கோவன்.

ஐயா: [மெதுவாக] ராசம்மா செல்லம்மாக்கா வந்திருக்கிறு போலக் கிடக்கு.

ராச: [அடக்காக] சூ...எப்பன் சத்தம்போடாமலிருங்கோ.

செல்: [ஏளனமாக சப்தித்து] அ... நான் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறன்.பேசாமல் அம்சடக்கத்தில் கிடக்கிறியளே? பின்ன என்ன, எனனிலதான்ரியாத்தைகுற்றம் நாங்க சும்மா கிடவாமல் கூளை கூளையாத் தந்திட்டு நாயாயலைகிறனல்லே? வீடுதேடி வந்தாலும் ஏனெண்டும்கேப்பாரில்லை...ஏ ராசம்மா எழும்பி வெளியால வாவன்.

ராச: (வந்துகொண்டு) அ... செல்லம்மாக்காவே? உள்ளுக்க வாக்கா.

செல்: அது கிடக்க, அதை ஏன் இன்னும் தராமலிருக்கிறியள்? எத்தினை தரம் அலையிறது?

ஐயா: அலைய வேண்டாமக்கா. எப்பன் சுகப்பட்டால் நான் கொண்டுவந்து தாறன்.

செல்: கணக்கெல்லாம் சரியா வச்சிருக்கே?

ராச: எல்லாம் வடிவாஎழுதி வைச்சிருக்கிறனக்கா.

செல்: இந்த மாசத்தோட வட்டி ஒருமிக்க எவ்வளவு தேறுது?

ராச: ஒரு நூற்றியம்பதுக்குக்கிட்ட வருமக்கா.

செல்! (கடுகடுத்து] உதென்ன செப்படி வித்தை ராசம்மா போன மாசத்தில வேண்டினதுக்கு வட்டி எவ்வளவெண்டு சொன்னனல்லே?

ராச: ஓமக்கா, அதுசரிதான்

செல்: அப்ப பேந்தேன் நீ சொன்ன கணக்கில பிழைக்குது?

ராச: இப்ப பெரியகஷ்டம். ஏதோ ஒரு மாதிரிப் பாத்து வேண்டக்கா, அடுத்த மாச வட்டி தரேக்க பாப்பம்,

செல்: அப்ப, ஒண்டு செய்யன்?

ராச: என்னது?

செல்: குமுக்கா ரொக்கத்தைத் தந்திடன், பிசகும் தீர்ந்திடும்.

ஐயா: (சிரித்து இருமியபடி) வட்டியே குடுக்கத்திண்டாட்டமாக் கிடக்கு, ரொக்கம் எப்படியக்கா தாறது?

ராச: [அழுத்தமாக] செல்லம்மாக்கா, நீங்கள் இனி ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். [சினப்புடன்] இரண்டு நாளைக்குள்ள கட்டாயமாக உங்கட காசு உங்கடவீட்டுக்கு வரும். நீங்கள் போயிட்டு வாருங்கோ.

செல்: [கினப்புடன்] என்ன ராசம்மா, கடுவலாய் நிக்கிருய்? [போய்க்கொண்டு] என்னவோ, உன்ர வாக்கைநம்பிப் போறன்... பிறகு என்னோட கொழுத்தாடு பிடிக்காதை...

## மனோகர்

### வெளிநாடு போகிருர்

## அமெரிக்காவில் 'இலங்கேஸ்வரன்' மேடை ஏறும்

(நமது சென்னை நிருபர்)

வில்லன் நடிகர் மனோகர் நாடகங்கள் நடத்துவதற்காக அமெரிக்கா போகிருர். வெளிநாடுகளில் 4 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

நடிகர் மனோகர் நேஷனல் தியேட்டர்ஸ் என்ற பெயரில் நாடகக் குழுவைத் துவக்கி கடந்த 24 ஆண்டுகளாக நடத்திவருகிருர். இலங்கேஸ்வரன், நாடக முத்திரையன், துரோணர், சாணக்கியசபதம், சுக்கிராச்சாரியார் போன்ற சரித்திர நாடகங்களை நடத்தி வருகிருர். இந்த ஆண்டு இறுதியில் வெள்ளி விழா (25 ஆண்டு நிறைவு) கொண்டாடப்படுகிறது. அத்துடன் இலங்கேசுவரன் நாடகத்தை 1000 முறை மேடையில் நடித்ததற்காகப் பாராட்டும் பெறுகிருர்.

இதற்கிடையில் நடிகர் மனோகருக்கு அமெரிக்காவில் உள்ள இந்திய கலாச்சாரக்குழுவும் மற்றும் தமிழ் மன்றங்களும் அங்கு வந்து நாடகங்கள் நடத்தும்படி அழைப்பு விடுத்துள்ளன. அதை ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டு கடைசியில் நாடகக் குழுவினரோடு அமெரிக்கா செல்கிருர் நியூயோர்க், வாஷிங்டன், லாஸ் ஏஞ்சல்ஸ், சான்பிரான்சிஸ்கோ ஆகிய முக்கிய நகரங்களில் நாடகம் நடத்துவார். அமெரிக்கா போகுமுன் தென்னுபிரிக்காவுக்கும் போகிருர். அங்கும் பல நாடகங்கள் நடத்துவார். இந்தநாடுகளில் 4 மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து நாடகங்கள் நடத்த திட்டமிட்டிருக்கிருர்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் 70-வது தினம்

அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க

**இன்ஸ்பெக்டர் மனைவி**

வருகிறது ஜெமினி, பத்மினி, ராதா நடித்த **சித்தி**

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன் — சாரதா நடித்த

**துலாபாரம்** [தமிழ்]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது

லிடோ (யாழ். நகர்) போன் 7693

முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த

**உறவு சொல்ல ஒருவன்**

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

பஷிராஜாவின் **மரகதம்** சிவாஜி—பத்மினி நடித்த (புதிய பிரதி)

28-2-78 நிதியுதவிக்காட்சி பி. ப. 2-30 மட்டும்

**மருதநாட்டு வீரன்**

ஞாயிறு (26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்

**BLACK MOUNTAIN**

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

கமலஹாசன் ரஜனிகாந்த்

எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா

**மூன்று முடிச்சு**

திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-30

ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த

**மேயர் மீனாட்சி**


# இந்திய....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிகளில் தேர்ந்த புலமை பெற்ற அறிஞரான 'வல்கா முதல் கங்கை வரை' என்னும் அரிய நூல் எழுதிய ராகுல் சாங்கிருத்தியாயன் திபெத்—ஹிந்தி அகராதியின் தொகுப்பாசிரியர்.

ரஷ்ய—இந்தி அகராதியும் இந்தி—சிந்தி அகராதியுங்கூட சாகித்ய அகாதமியால் வெளியிடப்பட்டுள்ளன.

சாகித்ய அகாதமி அஸாமி, பஞ்சாபி, கன்னட நாடோடிப் பாடல்களையும் கதைகளையும் திரட்டி பழமையான கலைத் தன்மைபெற்ற அம்சங்கள், யந்திர மயமான வாழ்வை நடத்தும் நகர மக்களுக்கு எட்டும்படியாக செய்துள்ளது.

1955ல் இருந்து சாகித்ய அகாதமி தான் அங்கீகரித்துள்ள மொழிகளிலிருந்து ஒவ்வொரு மொழிக்கும் சிறந்த ஒரு நூலைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் 5,000 ரூபாய் வழங்குகிறது. இப் பரிசு பெறும் நூலாசிரியர்கள் பொதுவாக மதிப்புமிக்கவர்களாகவே இருந்துவருகிறார்கள். ஆங்கிலத்தில் எழுதும் ராஜா ராவ், ஆர். கே. நாராயணன், முல்க்-ராஜ் ஆனந்த் ஆகியோர் சாகித்ய அகாதமி பரிசுபெற்றவர்கள். வங்க நாவலாசிரியரான தாராசங்கர் பந்தோபத்தியாயா. கவி விஷ்ணு தேவ், பஞ்சாபிக் கவியான திருமதி அமிர்தா ப்ரீதம், தமிழ் நாவலாசிரியர் கல்கி, ஜெயகாந்தன், கவிஞர் பாரதிதாசன், சிறுகதை ஆசிரியர் கு. அழகிரிசாமி, மலையாள நாவலாசிரியர் தகழி சிவசங்கரன் பிள்ளை. கவிஞர் சங்கர குருப், இந்தி நாவலாசிரியர் ஜைனேந்திர குமார், யஷ்பால். தெலுங்கு கவி ஸ்ரீ.ஸ்ரீ., குஜராத்திக் கவிஞர் உமா சங்கர் ஜோஷி ஒரிய நாவலாசிரியர் கோபிநாத் மொஹந்தி, கன்னடக் கவிஞர் டி. ஆர். போந்தரே, சம்ஸ்க்ருத அறிஞர் வே. ராகவன் ஆகியோர் தங்களின் சிறந்த நூல்களுக்காக சாகித்ய அகாதமி பரிசுபெற்ற எழுத்தாளர்களில் சிலர்.

சாகித்ய அகாதமி இலக்கியத்தில் சிறப்பாக பணியாற்றியவர்களைத் தேர்ந்தெடுத்து சாகித்ய அகாதமியில் ஃபெல்லோஷிப் என்ற உயர்ந்த இலக்கிய கௌரவத்தை அளிக்கிறது. அச் சிறப்புப் பெற்றோரில் ஹிந்திக் கவியான சுமித்திரானந்த் பந்த், மலையாள நாவலாசிரியரான வைக்கம் முகம்மது பஷீர், கன்னட நாவலாசிரியர் மாஸ்தி வெங்கடேச ஐயங்கார், பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், இராஜாஜி ஆகியோர் இலராவர்.

சாகித்ய அகாதமி இந்திய மொழி எழுத்தாளர் கூட்டங்களை அடிக்கடி நடத்தி வருவதோடு பிறதேச எழுத்தாளர்களை சந்திக்கவும் கலந்துரையாடவும் ஏற்பாடுகளைச்செய்து வருகிறது.

அடிக்கடி சாகித்ய அகாதமியின் செயல்முறைகள், பரிசு அளிப்பு நூல்கள்பற்றி மிகக் கடுமையாகக் குறைகூறப்பட்டாலும் கூட, பல மொழிகளும் பல்வேறு கலாச்சாரத் தன்மைளுங்கொண்ட ஒரு பெருநாட்டின் இலக்கியத் தொடர்புக்காக ஒரே செயல் நிறுவனமாக சாகித்திய அகாதமிதான் செயல்பட்டு வருகிறது.

நன்றி: திட்டம்


புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)

தினசரி 2-30, 6-30, 9-45.

சிவாஜி - வரலட்சுமி

**தாய்**

வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி: 6-30, 9-30

சனி, ஞாயிறு: 2-30.

சிவாஜி — பத்மபிரியா

**வைரநெஞ்சம்**

நாகம்ஸ் [சுன்னாகம்]

தினசரி: 6-45, 10-00

ஜெய்சங்கர் நடித்த

**துணிவே துணை**


# இனி என்ன கலியாணம்?



இன்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறும் 'இனி என்ன கலியாணம்' நகைச்சுவை நாடகத்தில் சுவையான ஒரு கட்டம்.

## மேடையில் தோன்றுவார்



'நான் உங்கள் தோழன், டைரக்டர் எஸ் வி. சந்திரன் இன்று ராணி படமாளிகையில் ரசிகர்களின் முன் தோன்றுவார்

'காத்திருப்பேன் உனக்காக' படத்தை டைரக்ட் செய்தவரான இவர் இப்பொழுது 'எங்களில் ஒருவன்' என்ற படத்தை டைரக்ட் செய்துவருகிறார்.

# பம்பாய்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காயத்ரி என்று மாற்றிக் கொண்டார் இதற்கான எண்களைப் பாருங்கள்

KAYATHRI

2 1 1 1 4 5 2 1 = 17. 1+7=8

மாலையில் பழுதடைந்த விமானம் மீண்டும் கிளம்பிய நேரம் நள்ளிரவு 1-34. 1+3+4=8. விமானம் கீழே விழுந்த உடன் அதன் தீயை அணைக்கப் போராடிய தீயணைப்பு வண்டிகளின் எண்ணிக்கை 17. 1+7=8.

விதி இந்த 8 எண்மூலம் எப்படி கோரமாக விளையாடி இருக்கிறது பாருங்கள்.

— வி. ரவிச்சந்திரன்


இன்று 50வது வெற்றித் தினம்

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்

வி. பி. கணேஷன்

சுபாஷினி

ராமதாஸ்

ஜெனிட்டா




50-வது தினத்தை முன்னிட்டு இன்று சகல காட்சிகளிலும் "நான் உங்கள் தோழன்" கலைஞர்கள் மேடையில் தோன்றுவார்கள்.

மனோஹரா (யாழ நகர்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி - ஈ. வி. சரோஜா

**பாக்கிய லக்ஷ்மி** (புதிய பிரதி)

Rio (Jaffna) Phone: 7607 Daily 4 shows

**COUNT DOWN TO DOOMSDAY**

Also: Latest News-See Ravi Shankar in Action

Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.

MICHAEL CAINE in

**The Romantic English Woman**

(Color)

(வயது வந்தவர்களுக்கு மட்டும்-Adults only)

## கைதடி சைவ அநாதைஇல்ல
# கொடி நாள்விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவஅநாதைஇல்ல வருடாந்தக் கொடிநாள் விழா இல்ல முன்றலில் அடுத்த மாதம் 3ம் திகதி காலை 7மணிக்கு ஆரம்பமாகி நடைபெற விருக்கிறது.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இல்லத் தலைவர் திரு. க. ஞானச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்துவார். வடமாநிலக் கல்வி அதிகாரி திரு. மாணிக்கவாசகர் ஆரம்பவுரை நிகழ்த்துவார்

யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் அப்துல்காதர் ஆசிச்செய்தி வழங்குவார்.

யாழ். அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் திரு. பி டி பிரன்முத்துகல, ஊர்காவற்றுறை எம் பி. பண்டிதர் கா பொ இரத்தினம் திருவாளர்கள் க மாணிக்கநடராசா, தி முருகேசம்பிள்ளை, தொழிலதிபர்கள்: எஸ் தியாகராஜா, க கனகராசா, சி சின்னத்துரை, மு கோபாலரத்தினம், எஸ் இராசரத்தினம், நா தியாகராசா, சாவகச்சேரி எம் பி வி என் நவரத்தினம், நல்லூர் எம் பி மு சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம் பி, மு திருநாவுக்கரசு, நம. சிவப்பிரகாசம், ஜே செந்தில்நாதன், எஸ் பி சாமி, இ அரசரத்தினம், எஸ் விஸ்வலிங்கம், வி பொன்னம்பலம், சி நவரத்தினம், மா கனகசபை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். [க-அ]

## பாடசாலை மூடியமை
# மாணவர்களுக்கு கிடைத்த பெரு வெற்றி
## குருநாகலில் 'சிறிமா'

(குருநாகல்)

சத்தியாக்கிரகத்தை இந்த நாட்டில் அறிமுகம் செய்து வைத்தது இன்றைய அரசே. அதே அரசு இன்று தரப்படுத்தலை நீக்கியதை ஆட்சேபித்து மாணவர்கள் மேற்கொள்ளவிருக்கும் சத்தியாக்கிரகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு முன்னாள் பிரதமரும் சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

### பெருந்திரளான கூட்டம்

கடந்த வருடம் இடம்பெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் டைபெற்ற சுதந்திரக்கட்சியின் கூட்டமொன்றில் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தது இதுவே முதல் தடவையாகும் என்று எமது நிருபர் அறிவித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா இக்கூட்டத்தில் மேலும் பேசுகையில் மாணவர்கள் மேற்கொள்ள இருந்த சத்தியாக்கிரகத்துக்கு எதிராக அரசு பாடசாலைகளை மூடியுள்ளமை மாணவர்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். (ம-இ)

# தரப்படுத்தலை சிறிமா ஆதரிக்கிறாரா?
## கல்வி அமைச்சர் கேள்விக்கு அவா அளித்துள்ள பதில்

தேசிய அரசுப் பேரவையில் வெள்ளியன்று நிகழ்ந்த விவாதத்தின் போது கேட்ட சில குறுக்கீடுகள் இவை

கல்வியமைச்சர்: எதிர்கட்சியில் தற்போதுள்ள 8 சுதந்திரக்கட்சியினரின் 16வருடகால ஆட்சியில் கல்வி வசதி சகலருக்கும் நியாயமாக வழங்கப்படவில்லை

விஜயசிறி (சு.க. எம்.பி): அப்போது நீரும் சுதந்திரக்கட்சியில் தான் இருந்தீர்.

கல்வி அமைச்சர்: அதிர்ஷ்டவசமாக நான் அப்போது எம்.பி யாக இல்லை.

விஜயசிறி: அனைத்துக்கும் நீரும் பொறுப்பு.

கல்வி அமைச்சர்: சபாநாயகர் அவர்களே. எதிர்ப்புறத்தில் உள்ள (சு. க. உறுப்பினர்களைக் குறிப்பிட்டு) பின்வரிசை உறுப்பினர்கள்...

விஜயசிறி: இல்லை நாம் முன்வரிசை உறுப்பினர்களை

(சிரிப்பு)

கல்விஅமைச்சர்: (சுதந்திரக்கட்சியினரைப்பார்த்து) நீங்கள் எதிர்க்கட்சியிலிருந்த போதிலும் ஒருபலமான எதிர்க்கட்சியாக இருக்கும் அதிர்ஷ்டம் உங்களுக்கு இல்லை. ஏதோ பெயரளவுக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறீர்கள். எதிர்க்கட்சியில் நீங்கள் சிறுபான்மையினரே.

கல்வி அமைச்சா (சுதந்திரக்கட்சியினரைப்பார்த்து) நீங்கள் தரப்படுத்தலை ஆதரிக்கிறீர்களா?

உறுப்பினர்கள்: விடை அளியுங்கள்! விடை அளியுங்கள்!

விஜயசிறி: தரப்படுத்தலை நான் எதிர்க்கிறேன்.

கல்வியமைச்சர்: அத்தனகலை எம். பி. ஆதரிக்கிறாரா? எதிர்க்கிறாரா?

சிறிமா: உரிய காலத்தில் அதற்குப் பதில் அளிப்பேன். (ம-இ)

## திங்கள்முதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையூறு விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

கடந்தஅரசுஅறிமுகம்செய்த 'தரப்படுத்தல்' திட்டத்தை இன்றைய அரசு ரத்துச்செய்ததற்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்ய சில அரசு எதிர்ப்புச்சக்திகள் முயன்றதை அடுத்து கடந்த வியாழன்-வெள்ளிக்கிழமைகளில் அரசு பாடசாலைகளை மூடியது தெரிந்ததே. [ம-இ]

## வட பகுதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலத்தை அவரது அளவெட்டியிலுள்ள இல்லத்தில் சந்தித்து இன்றைய அரசியல் நிலை பற்றி உரையாடினர்.

திரு.லயனல் போபகே இனப் பிரச்சினை பற்றி மாக்கிஸவாதிகளின் கண்ணோட்டம்" என்ற 71பக்கங்களைக் கொண்ட சிங்கள மொழியிலான நூல் லொன்றையும் சமீபத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகான வேண்டும் என்று இந் நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழா விடுதலை..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலை பற்றி ஆராய்ந்து திரு. இராசதுரையுடன் பேச்சுவார்த்தை நடத்தி அங்கு கூட்டணிக்கிளைகளை நிறுவுமாறும் இக்குழுவை நடவடிக்கைக்குழு பணித்துள்ளனர்,

மார்ச் மாதம் 8-ம் திகதிக்கு முன்னர் இப்பணிகளைச்செய்யுமாறு இக்குழு பணிக்கப்பட்டுள்ளது.

### அமைப்புவிதிகளில் மாற்றம்

கிராம ரீதியாகக் கூட்டணிக் குழுக்களை அமைத்து அக்குழுக்களின் தலைவர், செயலாளர் உட்பட தலா மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் தொகுதிக் குழுவில் அங்கம் வகிக்குமாறும் தொகுதிரீதியாக அமைக்கப்படும் குழுக்களிலிருந்து அதன் தலைவர் செயலாளர் உட்பட மூவர் கொண்ட குழு பொதுச்சபையில் அங்கம் வகிக்குமாறும் அமைப்பு விதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன

பொதுச்சபையில் 150 அங்கத்தவர்களைச் சேர்ப்பதென்றும் நடவடிக்கைக் குழுவில் 21 பேரைச் சேர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது (ம-இ)

## பாராட்டுவிழா ஒத்திவைப்பு

(யாழப்பாணம்)

ஈழத்து பிரபல மிருதங்க வித்துவான் திரு. ஏ. எஸ். இராமநாதனின் சேவையைப் பாராட்டி அவரது மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட விழா மார்ச் மாதம் 12-ம் தேதிக்கு பின்போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்விழா இம்மாதம் 26-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விழாவை பெரும் கலைவிழாவாக நடாத்தி பொற்கிழி வழங்கவும் மாணவர்கள் முடிவுசெய்துள்ளதால் விழாத் தேதி பின்போடப்பட்டுள்ளது. [க]

## கோரிக்கை

(சுழிபுரம்)

பண்ணாகம் கிராமத்திற்கு ஒரு சமாதான நீதிபதியை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி பொது ஸ்தாபனங்கள் வட்டுக்கோட்டை எம்.பி திரு. நாவுக்கரசையும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையும் கோரியுள்ளனர்.

## மரண அறிவித்தல்
### சின்னட்டி தவசி
(நிற்சாமம்)



சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த தர்மலிங்கம், பாலசிங்கம், பராசசிங்கம், திருமதி மனோன்மணி நடேசு ஆகியோரின் தந்தையும், தங்கத்தின் அன்புக் கணவருமான சின்னட்டி தவசி காலமானார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (ஞாயிறு) 1 மணியளவில் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

-தவசி தர்மலிங்கம். 8625

# சுவீப் முடிவுகள்

நேற்று முன்தினம் அதிர்ஸ்டம் பார்க்கப்பட்ட 652-வது தேசிய சுவிப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
57 X 0500
ரூ. 1,00,000

இரண்டாம் பரிசு
35 N 0222
ரூ. 40,000

மூன்றும் பரிசு
65 A 0413
ரூ. 10,000

தலா ரூ. 1,887 பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 12 ,A 0988 | 65 A 0062 |
| 53 A 0064 | 45 A 0838 |
| 09 A 0790 | 35 A 0698 |
| 27 B 0682 | 33 C 0221 |
| 36 C 0979 | 62 C 0404 |
| 01 C 0114 | 08 C 0420 |
| 22 C 0707 | 08 D 0422 |
| 36 D 0176 | 01 D 0649 |
| 34 D 0554 | 18 D 0520 |
| 21 E 0392 | 21 E 0419 |
| 06 E 0311 | 25 E 0611 |
| 35 E 0645 | 48 F 0052 |
| 33 F 0710 | 21 F 0619 |
| 62 F 0457 | 56 F 0799 |
| 11 G 0403 | 43 G 0889 |
| 37 G 0155 | 59 G 0429 |
| 53 G 0965 | 34 H 0468 |
| 23 H 0408 | 07 H 0045 |
| 40 H 0859 | 31 H 0664 |
| 53 J 0737 | 34 J 0023 |
| 19 J 0730 | 50 J 0117 |
| 27 K 0627 | 05 K 0277 |
| 54 K 0766 | 68 K 0418 |
| 28 L 0572 | 15 M 0197 |
| 01 M 0729 | 31 M 024 |
| 33 M 0771 | 43 M 0905 |
| 10 M 0183 | 59 N 0876 |
| 67 N 0596 | 64 N 0141 |
| 01 O 0912 | 44 O 0690 |
| 44 O 0414 | 23 P 0423 |
| 02 P 0896 | 64 P 0404 |
| 20 P 0328 | 46 p 0493 |
| 23 P 0334 | 11 Q 0982 |
| 30 Q 0525 | 43 Q 0309 |
| 36 Q 0358 | 26 R 0499 |
| 08 R 0724 | 01 R 0177 |
| 46 S 0030 | 20 S 0375 |
| 43 S 0381 | 16 S 0260 |
| 60 S 0785 | 64 T 0201 |
| 36 T 01[illegible]6 | 36 T 0461 |
| 04 T 0279 | 44 T 0695 |
| 31 U 0615 | 18 U 0504 |
| 32 U 0317 | 04 U 0531 |
| 49 U 0838 | 35 V 0531 |
| 61 W 0763 | 11 W 0784 |
| 27 W 0545 | 40 X 0328 |
| 22 X 0094 | 60 X 0893 |
| 13 Y 0504 | 66 Y 0178 |
| 07 Z 0554 | 43 Z 0503 |
| 17 Z 0849 | 48 Z 0730 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## யாருடையது!

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் சிக்கோ ஒட்டலுக்கு முன்னால் விடப்பட்ட றலி BA 25301 இலக்கமுடைய சைக்கிளுக்குப் பதிலாக CL 6765இலக்கமுடைய சைக்கிளை யாரோ மாறிக்கொண்டு சென்றுவிட்டனர். சைக்கிள் உரிமையாளர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்க, க.மாயராசா, தொல்புரம்,சுழிபுரம். 8623

## SALE

Peugeot 203 E L. Late series for sale. Contact: R. Niruthan, Chulipuram 8612

## மரண அறிவித்தல்
### செல்வி இளையதம்பி தற்பராதேவி

வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வி இளையதம்பி தற்பராதேவி அகாலமரணமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் இளையதம்பி, விஷவைத்தியர் திருமதி அனுஷம்மா ஆகியோரின் அன்பு மகளும், சாயாதேவி, பத்திரிகை நிருபர் சற்குணநாதன், வசந்தாதேவி ஆகியோரின் சகோதரியும், ஆயுள்வேத திணைக்களத்தைச் சேர்ந்த செல்வராசாவின் மைத்துனியும், விஷவைத்தியர்கள் நாரந்தனை தியாகராசா, யாழ். கொட்டடி சிற்றம்பலம், பாண்டியன் தாழ்வு சிவபாதலிங்கம் ஆகியோரின் மருமகளுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (ஞாயிறு) 26-02-78 காலை 9-00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 8624

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிலன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka